★ கூறைகள்
★ காஞ்சிபுரம்
★ பட்டு வேட்டி
★ பிளவுஸ் வகைகள்
மற்றும்
சுபமுகூர்த்த புடவைகளை
சுலபமே தெரிவுசெய்ய
சோபனா
ரெக்ஸ்ரைல்
16, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

இன்றைய அறிமுகம்
நாளைய நாகரீகம்
இறக்குமதி செய்யப்பட்ட
சாறிகள்,
நெடிமேட் ஆடைகளை
நவீன டிசைன்களில்
மனம் போல்
பெற்றுக்கொள்ள
சோபனா
ரெக்ஸ்ரைல்
16, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

சுடர் 5: பிரமோதூத ஹூ சித்திரை மீ 26 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1410 ஷவ்வால் பிறை 13 (09-05-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 81

"இவர்கள் போய்த்தான் அவர்கள் வரமுடியும்"

# ஈழத்தமிழ் அகதிகள் சென்றாலேயே மலையகத்தமிழர்களை ஏற்கமுடியும்

## கருணாநிதி கண்டிப்புடன் அறிவிப்பு

சென்னை, மே 09

இந்தியாவில், குறிப்பாக தமிழகத்தில் உள்ள ஈழத் தமிழ் அகதி மக்கள் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்ட பின்னரே, அந்த நாட்டில் உள்ள மலையகத் தமிழர்களை இந்தியாவுக்கு அழைப்பது பற்றிச் சிந்திக்க முடியும்.

இவர்கள் போய்த் தான் அவர்கள் வர முடியும்;

இவ்வாறு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி கண்டிப்புடன், வெட்டு ஒன்று துண்டு இரண்டாக தமிழ்நாடு சட்டசபையில் நேற்றுத் தெரிவித்தார்.

மலையகத் தமிழர்களை இந்தியாவுக்கு. தமிழகத்துக்குத் திருப்பி அனுப்புவதில் இலங்கை அரசு அவசரம் காட்டி வருவதும் –

தமிழகத்தில் உள்ள ஈழத் தமிழ் அகதிகளையும் ஏற்றுக் கொண்டாலே இந்தியா மலையகத் தமிழர்களை ஏற்றுக் கொள்ளும் என்று இந்தியா கூறி வருவதும் – தெரிந்தவையே.

இப்போது இவ் விவகாரம் இரு நாடுகளிலும் சூடு பிடித்து வருகிறது. அதன் பிரதிபலிப்பாக தமிழ் நாடு சட்டசபையிலும் நேற்றுப் பிரஸ்தாபிக்கப்பட்டது.

அப்போதே முதல்வர் கருணாநிதி – இவர்கள் போய்த் தான் அவர்கள் வரமுடியும். அதுவும் இவர்கள் அனைவரையும் ஒரே டியாக ஏற்றுக் கொள்வது தமிழக பொருளாதார சூழ் நிலைக்கு ஏற்புடையதல்ல – என்று கண்டிப்புடன் தெரிவித்தார்.

மாக்ஸிய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த சட்டசபை உறுப்பினர் திரு. டபிள்யு ஆர். வரதராஜன் மலையகத் தமிழர் விவகாரம் குறித்துக் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளிக்கும் விதத்தில் முதல்வர் கருணாநிதி

(7 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி




அப்ப--- சங்கிலி கடத்தினவருக்கு கையிலை வளையம் மாட்டியாச்சு எண்டு சொல்லுங்கோ--.!

## மலையக மக்களை நாடு கடத்தும் முயற்சிக்கு புலிகள் கண்டனம்

யாழ்ப்பாணம், மே 9

ஒரு லட்சம் மலையகத் தமிழர்களை கட்டாயமாக நாடு கடத்த இலங்கை அரசு மேற்கொள்ளும் முயற்சிக்கு விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி பலத்த ஆட்சேபமும் கண்டனமும் தெரிவித்திருக்கிறது.

இது தொடர்பாக முன்னணியின் தலைமைச் செயலகம் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மலையகத்தில் வாழும் தமிழ் மக்கள் அனைவரும் இலங்கையின் குடிமக்களே. இங்குள்ள அனைவருக்கும் இந்நாட்டின் குடியுரிமை உடனடியாக வழங்கப்படவேண்டும். இவர்களில் ஒரு பகுதியினரை இந்தியாவுக்குத் திருப்பியனுப்பும் திட்டத்தை இலங்கை அரசு மறுபரிசீலனை செய்யவேண்டும் என எமது கட்சி கேட்டுக் கொள்கிறது.

மலையகத்தில் இன்று வாழ்பவர்கள் இந்த மண்ணில் பிறந்தவர்கள். அவர்கள் மட்டுமல்ல, அவர்களுக்கு முந்திய இரண்டு மூன்று தலைமுறையினர் இந்த மண்ணில் பிறந்தவர்களே.

மலையகம் வாழ் தமிழ் மக்கள் இந்த நாட்டை சுரண்ட வரவில்லை. எத்தனையோ சொல்லொணா கொடுமைக

(7 ஆம் பக்கம் பார்க்க)

யாழ், கிளிநொச்சி மாவட்டங்களுக்கு

## 1,200 பொலீஸார் தேவை ஆனால்531 பேரே கடமையில்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கு ஆயிரத்து 200 பொலீஸார் தேவைப்படும் அதேவேளை, 531பேர் மட்டுமே கடமையாற்றுகிறார்கள்.

இந்த மாவட்டங்களில் உள்ள 12 பொலீஸ் நிலையங்களுக்கும் தலா 100 பேர் வீதம் ஆயிரத்து 200பேர் கடமையாற்ற வேண்டும்.

ஆனால் நிரந்தர சேவையில் 268 பேரும், றிசேர்வ் சேவையில் 263 பேரும் மொத்தம் 531 பேர் மட்டுமே கடமையாற்றுகிறார்கள். (ஓ-3)

## ஹெலி விபத்திற்குக் காரணம் தொழில் நுட்பக் கோளாறு

கொழும்பு, மே 9

சிகிரியா காட்டுப் பகுதியில் கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற ஹெலிக்கொப்டர் விபத்துக்கு ஹெலியில் ஏற்பட்ட தொழில் நுட்பக் கோளாறே காரணம்.

விமானப்படையின் உயர் அதிகாரிஒருவர்இத்தகவலைத் தெரிவித்தர்.

சிகிரியா காட்டுப் பகுதியில் நடமாடுவதாகச் சந்தேகிக்கப் படும் கொள்ளையர் கோஷ்டி ஒன்று இந்த ஹெலியைச் சுட்டு வீழ்த்தியிருக்கலாம் என முன்னர் சந்தேகம் தெரிவிக்கப்பட்டது தெரிந்ததே. (உ-2-3)

## 135 தங்கச் சங்கிலிகளை கடத்த முயன்றவர் கைது!

சப்பாத்துக்குள் 135 தங்கச் சங்கிலிகளைக் கடத்தி வந்த ஒருபயணியை கட்டு நாயக்கா விமான நிலையத்தில் வைத்து சுங்கஅதிகாரிகள் கைது செய்தனர்.

இலங்கையரான அந்த நபருக்கு 16 லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

ஒன்றரை கிலோ எடையுள்ள இந்த தங்கச் சங்கிலிகள் அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டன. [உ-எ]

யாழ். செயலகத்தில்

## சாரதி லைசென்ஸ் பெற ஏற்பாடு ஏதும் இல்லை

யாழ்ப்பாணம், மே 9

யாழ். செயலகத்தில் வாக சாரதி லைசென்ஸ் வழங்கும் ன வேலைகள் இப்போதைக்கு ஆரம்பிக்கப்படமாட்டா எனத் தெரிய வந்தது.

யாழ். வாகனப் போக்குவரத்துப் பிரிவில் கடமையாற்றிய பரீட்சகர் கொழும்புக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றதை அடுத்து எவரும் அந்த இடத்திற்கு நியமிக்கப்படவில்லை.

பொலீஸ் அதிகாரி ஒருவரைத் தெரிவு செய்து அனுப்பும் படியும், பயிற்சி அளித்து நியமிப்பதாகவும் மோட்டார் போக்குவரத்து திணைக்களம்

(7 ஆம் பக்கம் பார்க்க)

# அடுத்த வாரம் வடக்கில் புலிகள்-அரசு பேச்சு!

## அமைச்சர் ஹமீத் யாழ்ப்பாணம் வருவார்

யாழ்ப்பாணம், மே 9

விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையிலான உயர்மட்டப் பேச்சுக்கள் மீண்டும் அடுத்த வாரமளவில் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் எனத் தெரியவருகிறது.

மருத்துவ சிகிச்சை பெறுவதற்காக தற்போது லண்டன் சென்றிருக்கும் நீதியமைச்சர் ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீத் எதிர்வரும் சனிக்கிழமை அல்லது ஞாயிற்றுக்கிழமை கொழும்பு திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

கொழும்பு திரும்பியகையோடு விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக அவர் யாழ்ப்பாணம் வருவார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் உயர்மட்டக் குழுவுக்கும், அரசாங்க பிரதிநிதியாக பேச்சுக்களில் பங்குபற்றும் வடக்கு, கிழக்கு மாகாண சமாதானக் குழுவின் தலைவர் அமைச்சர்

(7 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

09-05-1990

புதன்கிழமை சித்திரை26

சுபநேரம்:
04-24 முதல் 05-54 வரை

இராகுகாலம்
11-54 முதல் 01-24 வரை

சித்திரா பௌர்ணமி விரதம்

## தம்பிமுத்து கொலைக்கும் புலிகளுக்கும் தொடர்பில்லை

### அன்ரன் பாலசிங்கம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மே 9

''சாம் தம்பிமுத்து எம். பி. கொலை செய்யப்பட்டதற்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் எந்த வித சம்பந்தமும் இல்லை'

விடுதலைப்புலிகளின் ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம் இவ்வாறு நேற்றுத் தெரிவித்தார்.

''இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பாக ஈ. பி. ஆர். எல். எவ் தலைவர்கள் சிலர் எம்மீது வீணாகப் பழி சுமத்த முயல்வதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.'' - என்றும் அவர் சொன்னார். (உ)

ரஞ்சன் விஜேரத்னா கூறுகிறார்:

# புலிகள் மீது வீண் பழியைப் போட இக்கொலையை செய்திருக்கலாம்!

## முன்னரே தம்பிமுத்துவை எச்சரித்திருந்தோம்

கொழும்ம்பு, மே 9

கொலை செய்யப்பட்ட சாம் தம்பிமுத்துவின் கொலைக்கும், மட்டக்களப்பில் முன்பு இவரது மனைவியார் கடத்தப்பட்டமைக்கும் எந்தவித சம்பந்தமுமில்லை. புலிகள் மீது பழியைப்போட வேறுயாராவது இக்கொலையைச் செய்திருக்கலாம்.

நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டம் குறித்து செய்தியாளர்களுக்குத் தகவல் தெரிவிக்கையில் அமைச்சர் திரு ரஞ்சன் விஜேரத்னா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

சாம் தம்பிமுத்துவின் கொலை தொடர்பாக விசாரணை நடைபெறுகிறது. பொலீஸார் தேடுதல் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை.

இது தொடர்பான பொலீஸ் விசாரணை பக்கச் சார்பின்றி நடத்தப்படும் என்பதை உறுதியாகக் கூறுகிறேன்.

திரு. சாம் தம்பிமுத்துவைக் கொலை செய்ய பல முறை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அண்மையில் அவரது மனைவியாரும் கடத்தப்பட்டு விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை கொலை செய்வதற்காக ஒரு குழு கொழும்புக்கு வந்துள்ளதாக அவர்களுக்கு எச்சரிக்கை விடுத்

(7 ஆம் பக்கம் பார்க்க)

## சாம் கொலை தமிழினத்துக்கு ஏற்பட்ட பலத்த பின்னடைவு

### 'புளொட்' சித்தார்த்தன் கண்டனம்

புதுடில்லி, மே 9

மட்டக்களப்பு எம். பி. சாம்தம்பிமுத்துவின் கொலை தமிழினத்துக்கு ஏற்பட்ட பலத்த பின்னடைவு.

இப்படி புளொட் இயக்கத் தலைவர் திரு. தர்மலிங்கம் சித்தார்த்தன் புதுடில்லியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இதனிடையில் கொழும்பில் புளொட், ரெலோ இயக்கங்களும் திரு. தம்பிமுத்துவின் கொலை குறித்து கண்டனம் தெரிவித்துள்ளன.

தமிழினத்தின் தலைவர்கள் இப்படிச் சுட்டுக் கொல்லப் படுவது தமிழினத்தின் எதிர்காலத்தைப் பாழ்படுத்தும் என்று ரெலோ எம். பி திரு. கருணாகரன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (ஓ-எ)

## தொடர்ந்து மயக்கத்தில் திருமதி கலா தம்பிமுத்து

கொழும்பு, மே 9

படுகாயமுற்ற நிலையில் கொழும்பு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ள சாம் தம்பிமுத்துவின் மனைவி திருமதி கலா தம்பிமுத்து இன்னும் சுயநினைவிழந்த நிலையிலேயே இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

அவர் இன்னும் ஆபத்துக் கட்டத்தைத் தாண்டவில்லை என்றும்-

அவரது நெஞ்சில் பாய்ந்திருப்பதாகக் கூறப்படும் சன்னமும் இன்னும் அகற்றப்படவில்லை என்றும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3)

## துப்புக்கள் இடைத்துள்ளதாக பொலீஸ்மா அதிபர் தகவல்

கொழும்பு, மே 9

சாம் தம்பிமுத்து எம். பி. கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக சில துப்புக்கள் கிடைத்திருப்பதாக பொலீஸ் மா அதிபர் ஏர்னஸ்ட்பெரேரா தெரிவித்தார்.

சுட்டவர்களை அடையாளம் காட்ட முடியும் என்று இரண்டு சாட்சிகள் கூறியுள்ளனர்.

சுட்டவர்கள் பாவித்ததாகக் கூறப்படும் மோட்டார் சைக்கிளில் காணப்பட்ட இலக்கத்தகடு பொய்யானது என்றும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

அந்த இலக்கத் தகட்டைக் கொண்ட மோட்டார் சைக்கிள் பஞ்சிகாவத்தையில் பாவிக்காத நிலையில் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது- இவ்வாறு பொலீஸ் மா அதிபர் சொன்னார். [உ-எ]

## சாம் தம்பிமுத்துவின் இறுதிக் கிரியைகள் நாளை

### கனத்தையில் நடத்த ஏற்பாடு

கொழும்பு, மே 9

கொலைசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாம் தம்பிமுத்துவின் தகனக் கிரியைகள் நாளை வியாழக்கிழமை பகல் 2 மணிக்கு கனத்தையில் நடைபெறும்.

இன்று அவரது பூதவுடல் பொதுமக்கள் அஞ்சலிக்காக பொரளை ஏ. எவ். ரேமன்ஸ் அந்தியகால சேவை நிலையத்தில் வைக்கப்பட்டிருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-3)

மரண விசாரணையில் சாட்சியம்

## காரில் இருந்து இறங்கவிருந்த வேளையில் தம்பிமுத்து மீது "பிஸ்டல்" சூடு விழுந்தது

கொழும்பு, மே 9

கனேடியத் தூதரகவாசலில் திரு. சாம் தம்பிமுத்து கார்க் கதவைத் திறந்து இறங்க இருந்த வேளை படபட என சத்தம் கேட்டது. காரின் கண்ணாடிகள் உடைந்து சிதறின. நான் பின்புறம் திரும்பிப்பார்த்தபோது ''பிஸ்டலை'' கையில் வைத்துக் கொண்டு ஒருவர் நிற்பதைக் கண்டேன். திரு. சாம் தம்பிமுத்து ஆசனத்தில் இரத்தம் தோய்ந்த நிலையில் சரிந்து கிடந்தார். மனைவி ஐயோ ஐயோ என்று குளறினார்.

மட்டக்களப்பு மாவட்ட எம். பியான சாம் தம்பிமுத்துவின் மரண விசாரணை நேற்று கொழும்பு வைத்திய சாலையில் நடைபெற்றது.

அங்கு அவரது கார்ச்சாரதியான பி. பி. விஜரத்னா சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

கொழும்பு மாவட்ட பிரதம நீதிபதி கே. டி. சித்திரசேனா முன்னிலையில் நடைபெற்ற மரண விசாரணையின் போது அவர் மேலும் கூறியதாவது:-

இறந்தவரின் கார்ச்சாரதியாக ஒன்றரை மாதமாக வேலை செய்து வருகிறேன். மாகாணசபைத் தலைவர் பொன்ராம் ராஜகாரியர் மூலமாக நான் இந்த வேலையில் சேர்ந்தேன்.

திரு. சாம் தம்பிமுத்து ஜிராவஸ்தியில் தங்கி இருந்தார். நான் கிறான்பாஸில்

(7 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பற்பல வர்ணங்களில் வளர்ப்பு மீன்கள் விற்பனைக்குண்டு. ஸ்கிப்ஸ் அக்கூரியம் 37/6, ஸ்ரான்லி வீதி, (மஸ்கன்ஸ் கட்டிட அருகில்) யாழ்ப்பாணம். (3507)

கோவில் தேவைகட்கு உபயோகிக்க கூடிய 6 K.V, 5K.V 2K.V மண்ணெண்ணெய்டீசல் (Single 3 Phase) ஜெனரேட்டர்களும் 11 H P Air Cool Petter டீசல் என்ஜின் ஒன்றும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- யூனிவேர்ஸல் சேர்விஸ், இல. 15, ஆடியபாத வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம். (கல்வியங்காடு சந்தியிலிருந்து 100யார் தூரத்தில்) (3436)

ஹொண்டா CD 50 Chaly C 50 புதிய பதிவு செய்யப்படாதது. தொடர்பு:கு.சுதர்சன், இல 9/6, மலர் மகள் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். மாம்பழம் சந்திக்கு அருகில். (13040)

கோண்டாவில் டிப்போவிற்கு அண்மையில் 3பரப்புக் காணி சுற்றுமதில் கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். ஐ. ராசு, கொக்குவில்மேற்கு, கொக்குவில். (3437)

ரெமிங்டன் தமிழ் புதிய ஹேபோட் தமிழ் தட்டெழுத்து இயந்திரம் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு ஆர். மருதலிங்கம், 8/1 அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (3441)

பாவிக்கப்பட்ட கூரை ஓடுகள், தேக்கம் கதவுகள், யன்னல்கள், நிலைகள், மரங்கள் என்பன விற்பனைக்குஉண்டு. இவை மீண்டும் பாவிக்கப்படக்கூடிய நல்ல நிலையில் உள்ளன. தொடர்புகொள்க; N. சுரேந்திரன், இல. 46, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். சந்திக்கும் நேரம்; காலை 9 மணிக்கும் 10மணிக்கும் இடையில் 12-05-90இற்கு முன் தொடர்பு கொள்க. [3439]

### சஞ்சிகை விற்பனைக்கு

க. பொ. த. (உயர்தர) மாணவர்களுக்கான பொருளியலாளன்செப் /டிசம்பர் 1989 மார்ச் 1990 விற்பனையாகின்றது. வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும் மண்டேலா ரேடர் (புத்தகசாலை) இல. 2 பஸ் நிலையம் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (3235)

### உணவுசேவை

உங்கள் நாளாந்த வைபவ ஓடர்களுக்கு (புரியாணி, பிறைட்றைஸ், நூடில்ஸ் வகைகள் சூப்வகைகள்) நாடவேண்டிய இடம் உங்களின் கிறில் - சைனிஸ்இன் இல 181, பலாலி வீதி, கோண்டாவில் பழைய இடத்தில் இருந்து, 200 மீற்றர் தொலைவில். (12999)

### கோழிக்குஞ்சு விநியோகம் (UPLANDS FARM)

(பிலிமத்) கறுப்பு (வரி) சேவல் தனிச் சிவப்பு கறுப்பு சேவல், (LOHMAN)பிறவுண் சேவல்பிறவுண், கறுப்பு, பேடு புறொயிலர் வான் கோழிக் குஞ்சுகள் 8ஆம், 9 ஆம் திகதிகளில் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. இல, 9, கந்தையா லேன். சுன்னாகம் [புகையிரத நிலையத்திற்கு அருகில்) (3438)

### சஞ்சிகைகள் ஓடர்

மங்கை, அம்புலிமாமா, ஆனந்தவிகடன், கல்கண்டு, கோகுலம், இரத்தினபாலா, பாலமித்திரா, சுமங்கலி, யூனியர் விகடன், போஸ்ட் இந்தியா ருடே, FRONT LINE, SPORT STAR, ஞானபூமி, பொருளியல் நோக்கு மற்றும் எல்லா இந்திய இலங்கை சஞ்சிகைகள் மீண்டும் ஓடர் செய்யலாம். ஸ்ரீகாந் புத்தகசாலை, No.165 மின்சாரநிலையவீதி, பஸ்நிலைய முன்புறம், யாழ்ப்பாணம். (C/4343)

### A/L தாவரவியல்

அல்காக்களும்பங்கசுக்களும் ஓர் அறிமுகம் எழுதியவர் கலாநிதி அ. சிவவாலன் விலை ருபா 35/- கிடைக்குமிடம் பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம். (சி/4494)

### Wanted

Wanted an Experienced Female Clerk for construction firm in Jaffna with experience for book-keeping and typing. please send youi Bio-Data on or before 15th may, 90 to the Following Address, Salary Negotiable No-126, C/O Uthayan, Jaffna [3042]

## ஊர்வலப் பவனி விழா

யாழ்ப்பாணம் மே 9

சூராவத்தை முத்துமாரி அம்மன் ஊர்வல பவனி விழா இம்மாதம் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 12 ஆம் திகதி சனிக்கிழமையும் இடம் பெறும்.

வெள்ளிக்கிழமை சூராவத்தை, சுன்னாகம் பகுதிகளிலும், சனிக்கிழமை ஏழாலைப் பகுதியிலும், ஊர்வலப் பவனி இடம் பெறும். (இ-7)

## பஸ் சேவை

கோப்பாய் மே 9

யாழ்ப்பாணம் - வாதரவத்தை பஸ் சேவை மீண்டும் நடத்தப்பட வேண்டும் என இப்பகுதி மக்கள் சம்பந்தப் பட்டோரைக் கேட்டுள்ளனர்.

போக்குவரத்துச் சேவை இல்லாததால் பொது மக்கள் சுமார் 3 மைல் தூரம் நடந்தே யாழ் செல்லும் பஸ்ஸில் ஏறமுடிகிறது.

### விலங்கியல்

R. ஈஸ்வரதாசன்
B.sc (Cey)

★ மீன்வளர்ப்பு —
ஆரம்பம்:- 7-5-90
திங்கள் 4.30 P.m

REVISION & PAPER
திங்கள் 5 30 P.m

★ [உணவுக்கால்வாய்த் தொகுதி]

21, மர்ணல்தறை லேன், கந்நமடம் - யாழ்ப்பாணம்.

91 ஆம் ஆண்டுக் குரிய புதியபிரிவு
ஆரம்பம்:- 9-5-90
புதன் 3.30 P.m
[முழு பாடத்திட்டமும் முடிக்கப்படும் ]
(சி-4398)

ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழக ஏற்பாட்டில்

# "ஷப்றா" கிண்ண கிரிக்கெட்; 19 அணிகள் மோதுகின்றன!

### இன்று யாழ்.கொக்குவில் இந்து மைதானங்களில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 9

'ஷப்றா' கிண்ணத்திற்காக ஷப்றா யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தின் ஆதரவுடன் யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் மட்டுப் படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டி இன்று ஆரம்பமாகயிருக்கின்றது.

வடமாகாணத்தைச் சேர்ந்த 19 கிரிக்கெட் அணிகள் இந்தப் போட்டியில் மோதுகின்றன.

சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகத்தின் சொக்ஸ் அணி, புளூஸ் அணி, கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி அரியாலை மத்திய விளையாட்டுக்கழக அணி, மல்லாகம் கிராம அபிவிருத்தி சங்க அணி, கிறீன் அன்ட் கோல்ட்ஸ் அணி, பற்றீசியன் விளையாட்டுக் கழக அணி, நொதேர்ண் விளையாட்டுக் கழக அணி, யங் பேர்ட்ஸ் விளையாட்டுக் கழக அணி, யாழ் ஜொனியன்ஸ், ஸ்டான்லி விளையாட்டுக்கழக அணி, ஷப்றா விளையாட்டுக்கழக அணி நியூ சோர்ட்ஸ் விளையாட்டுக் கழக அணி, மானிப்பாய் பரிஷ் அணி, பல்கலைக்கழக அணி, கிறாஸ் ஹொப்பர்ஸ், விளையாட்டுக்கழக அணி, ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழக அணி, யாழ் செயின்ட்ஸ் விளையாட்டுக் கழக அணி, நல்லூர் ஐக்கிய விளையாட்டுக்கழக அணி ஆகிய 19 அணிகளே இந்தப் போட்டியில் பங்குபற்றுகின்றன.

இன்று ஆரம்பமாகும் முதல் சுற்றுப் போட்டியில் முதலாவது ஆட்டம் காலை 8.30 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இந்த ஆட்டத்தில் அரியாலை மத்திய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க அணி மோதும்.

இன்று நண்பகல் ஒரு மணிக்கு யாழ் இந்து மைதானத்தில் நடைபெறும் இரண்டாவது ஆட்டத்தில் யாழ் ஜொனியன்ஸ் அணியை எதிர்த்து ஸ்டான்லி விளையாட்டுக்கழக அணி மோதும்.

இன்று காலை 9 00 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறும் மற்றொரு முதலாவது சுற்று ஆட்டத்தில் யாழ் செயின்ட்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நல்லூர் ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதும்.

முதல் சுற்று ஆட்டங்களும், இரண்டாம் சுற்று ஆட்டங்களும், கால் இறுதி அரையிறுதி ஆட்டங்களும் மட்டுப்படுத்தப்பட்ட 30 ஓவர்களைக் கொண்டதாக அமையும்.

இந்தப் போட்டி 'நொக்கவுட்' முறையில் நடைபெறவிருப்பது குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து ஆட்டங்கள் நாளையும், 12, 13, 19, 20 ஆம் திகதிகளிலும் நடைபெறும். 22 ஆம் திகதி இறுதியாட்டம் நடைபெறும்.

[ உ[

## உதைபந்தாட்டப் போட்டிகள்

குருநகர், மே 6

குருநகர் விளையாட்டு மைதானத்தில் இன்று இரு உதைபந்தாட்டப் போட்டிகள் நடைபெற உள்ளன.

3 30 மணிக்கு நாவாந்துறை சென். மேரிஸ் 'பி' அணியும் குருநகர் பாடும் மீன் 'பி' அணியும் மோதுகின்றன.

4-30 மணிக்கு வவுனியா தெரிவுக்குழுவை எதிர்த்து குருநகர்பாடும்மீன் 'ஏ' அணி மோதும். [ஒ-51]

## இளைஞர் சங்க போட்டிகள்

நெடுந்தீவு, மே 7

மே தினத்தை முன்னிட்டு நெடுந்தீவு புனித அன்ரனீஸ் இளைஞர் சங்கம் வைத்திய அதிகாரி எஸ் யோகேஸ்வரன் தலைமையில் விளையாட்டுப் போட்டிகளை நடத்தியது. 5 நாட்கள் நடைபெற்ற இப் போட்டிகளில் குருநகரைச் சேர்ந்த பலர்கலந்து கொண்டனர்.

வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை நெடுந்தீவு பங்குத்தந்தை அருட்திரு எம். எம். வி. அமிர்தகுமார். வழங்கினார். [ ப - 111 ]

## வெடிக்காத ஷெல்

சாவகச்சேரி நீதிமன்ற வளவு துப்புரவு செய்யப்பட்ட போது வெடிக்காத நிலையில் ஷெல் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டது.

பின்னர் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியினருக்கு அறிவிக்கப்பட்டு ஷெல் அகற்றப்பட்டது. (இ-117)

## பயிற்சிவகுப்பு 12 இல் ஆரம்பம்

கிளிநொச்சி மே 9

கிளிநொச்சி மாவட்டப் பயிலுநர் ஆசிரியர்களாகத் தெரிவானோருக்கு சேவைக் காலப்பயிற்சி வகுப்புகள் இம்மாதம் 12 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகும்.

தொடர்ந்து சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் வகுப்புகள் நடைபெறும் என இம் மாவட்ட கல்விப்பணிப்பாளர் திரு. வேலாயுதம் தெரிவித்தார். (ப-76)

## புலமைப் பரிசில்

ரயில்வே திணைக்களத்தைச் சேர்ந்த இருதமிழர்கள் புலமைப்பரிசில் பெற்று வெளிநாடு செல்கிறார்கள்.

ரயில்வே திணைக்கள மாவட்ட தொலைத் தொடர்பு சைகைப் பரிசோதகர் திரு. ரீ. சுந்தரலிங்கம் தொலைத்தொடர்புசைகைப் பரிசோதகர் திரு. என். பாலகுமாரன் ஆகியோர் இந்த இருவரும் ஆவர்.

மேலதிக விசேட தொழில் நுட்பப் பயிற்சி பெற இவர்கள் வெளிநாடு செல்கிறார்கள். (இ-18)

## பனை வள அபிவிருத்தி ஆய்வு

ஐ. நா. அபிவிருத்தி நிறுவனமும் பனை அபிவிருத்தி சபையும் இணைந்து மேற்கொள்ளும் பனை வள ஆய்வு எதிர்வரும் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள 28 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் ஆரம்பமாகிறது. (இ-160)

# பதவி வெற்றிடங்கள்

1. ஆசிரியர் பதவி:

ஆண்டு 05 முதல் ஆண்டு 11 வரை

★ கணிதம், விஞ்ஞானம், தமிழ், ஆங்கிலம், சமூகக்கல்வி, சமயம் ★

ஆகிய பாடங்கள் போதிப்பதற்குரிய தகுதியும் அனுபவமும் உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்.

2. அலுவலக உதவியாளர்கள்:

ஆங்கில அறிவு உள்ள, வடிவாக எழுதக்கூடியவர்கள் விண்ணப்பிக்கலாம்.

— இயக்குனர்

ESTD:-1973 REGD:- № J/7993

**The Express Institute**

IRUPALAI - KOPAY

[சி-5004]

# படித்த இளைஞர் தினம் 13-05-1990

சிரிப்பின் செல்வன்

## முத்துக்குமாரு கோபாலகிருஷ்ணனின்

# முதலாவது ஞாபக தினம்

அன்புடையீர்!

13 - 05 - 1990 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் படித்த இளைஞர் தினம் யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

இப்பாடசாலையில் கல்வி பயின்று நியாயமற்ற முறையில் எதுவித சட்ட விசாரணையுமின்றி கொலை செய்யப்பட்ட கோபாலகிருஷ்ணனை மையமாக வைத்து இதுபோன்ற மற்றைய இளைஞர்களையும் கௌரவிக்கும் முகமாக இவ்விழா எடுக்கப்படுகிறது.

கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவிற்குப் பல அறிஞர் கலந்து கொண்டு உரையாற்றவிருக்கிறார்கள்

காலை 10 மணிக்கு விசேட தபால் உறை இரத்துச் செய்யும் வைபவம் அங்கு ஏற்படுத்தப்படவிருக்கும் தபாற் கந்தோரினால் நடைமுறைப்படுத்தப்படவிருக்கிறது.

அன்பர்கள், நண்பர்கள், அனுதாபிகள், ஆதரவாளர்கள் கலந்து விழாவைச் சிறப்பித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

முத்துக்குமாரு குடும்பத்தினர்
கோபாலகிருஷ்ணன் ஞாபக நிதிய உறுப்பினர்
சர்வதேச முத்திரை சேகரிப்போர் அமைப்பு

''துர்க்கா ஹோம்''
8/2, தோம்பை வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

[13044]

பரா ஞாபகார்த்த
மென்பந்து கிரிக்கட் போட்டிக்கு
★ எமது பூரண வாழ்த்துக்கள் ★
நல்லூர்
ஐக்கிய விளையாட்டுக் கழகம்
நல்லூர்.
[13049]

## ★ அஜந்தாஸ் ஸ்ருடியோ ★

நெல்லியடி

மீண்டும் எமது அஜந்தாஸ் ஸ்ருடியோ நெல்லியடிச் சந்தியில் 'தங்கஸ்தான்' மாடிவீட்டில் 09 - 05 - 90 புதன்கிழமை இயங்க இருக்கிறது என்பதை அன்பர்கள், வாடிக்கையாளர்களுக்கு அன்புடன் அறியத்தருகிறோம்.

[3524]

யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

## பதவி வெற்றிடம்

பதவி:- விற்பனை உதவியாளர் (தரம் 308.13)

வயது:- 20 - 35 வரை

கல்வித்தகமை:- கூட்டுறவுப் பயிற்சி (சாதாரணம்) சான்றிதழ்,க பொ. த. (சாதாரணம்) சான்றிதழ் எண் ணிதம் /வர்த்தக கணிதம் /கணிதம் மற்றும் தமிழ்மொழி உட்பட 6 பாடங்களில் சித்தி அல்லது கூ. ச, ஊ. 308 15 ஆம் சம்பளத் திட்டத்தில் விற்பனை உதவியாளர் பதவியில் 5 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

சம்பளத் திட்டம்:- 225 — 395 / 10 X 7 — 12.50 X 8 — படிகள் தவிர

வதிவிடம்:- சங்கச் சுற்றாடலில் ஐந்து கிலோ மீற்றர் தூரத்திற்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் சுயமாகத் தயாரித்து பிறப்பு, கல்வி, அனுபவச் சான்றிதழ்களின் போட்டோ பிரதி இணைக்கப்பட்டு 25-05-1990 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால்மூலம் கீழ்காண்ட முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்,
யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
இருபாலை சந்தி,
கோப்பாய்.

(சி-4504)

# கொம்பியூட்டர் கல்வி

## COMPUTER PROGRAMMING IN BASIC LANGUAGE

4- Months

சனி, ஞாயிறு வகுப்புகள்

ஆரம்பம்: 20- 05- 1990

Fees: மாதம் 300/- மட்டுமே

- ★ Lectures by Members of the Institute of Data Processing Management (London)
- ★ Practicals on I B. M (Compatbiles)
- ★ More Hours of practicals
- ★ தமிழிலும் விளக்கங்கள்
- ★ Valuable Cerificate oa Completion of Course

d BASE III+, Lotus 1, 2, 3, Word- Processing
C. I. M. A, I. A. B, Shorthand & Typing
நடைபெறுகின்றன.

For Furthur details

**School of Businees Administration**
(Leaders in Computer Education)
16, 3rd Cross Street
[O. L. R தேவாலய மேற்குப் பக்கம்]
யாழ்ப்பாணம்.

(சி/5011)

ஆதரவற்ற பிள்ளைகளுக்கான இல்லத்திற்கு

## சேவை நோக்குடைய பணியாளர்கள்

# தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள ஆதரவற்ற பிள்ளைகளுக்கான இல்லத்துக்கு கீழ்க்காணும் பதவிகளுக்கு ஆட்கள் தேவை.

1. மேற்பார்வையாளர்
2. பிள்ளைகள் பராமரிப்பாளர்கள்.
3. சமையலாட்கள்

பொதுநலத்தில் ஈடுபாடுடையவர்களும். பொதுநல ஸ்தாபனங்களில் சேவையாற்றியவர்களும் தமது தகமைகளுடன் 13 - 05 - 1990 க்கு முன்னர் விண்ணப்பிக்கலாம். தெரிவு செய்யப்படுபவர்கள் ஓய்வு நாட்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் இல்லத்திலேயே தங்கி பணியாற்ற வேண்டும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

வடக்கு - கிழக்கு
அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழகம்,
157/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(3523)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

கண்ணுள்ளின் போகார் இமைப்பின் பருவராவர்
நுண்ணியர்எங் காத லவர்.

**பொருள்:**

எம் காதலர் எம் கண்ணுள் இருந்து போகமாட்டார்; கண்ணை மூடி இமைத்தாலும் அதனால் வருந்த மாட்டார். அவர் அவ்வளவு நுட்பமானவர்.

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்; தொலைபேசி: 2288

09 - 05 – 1990 த. பெ இலக்கம் 25

# இணக்க சூழ்நிலையை இலகுவில் தோற்றுவிக்க....

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் பணி புரிந்த சிங்களப் பொலிஸாரின் இடமாற்றம் அனேகமாகப் பூர்த்தியாகி விட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வடக்கு-கிழக்கில் வழமை நிலை — இயல்பு நிலை — திரும்பிவிட்டது, மக்கள் தமது அன்றாட அலுவல்களை அச்சமின்றி, தயக்கமின்றிச் செய்யமுடிகிறது.

எனினும் முன்னர் இருந்தது போல, வடக்கு-கிழக்கில் பல பொலிஸ் நிலையங்கள் இப்போது இல்லை. விரல் விட்டு எண்ணக்கூடிய மிகமிகச்சிலவே உள்ளன. அவற்றில் தமிழ்ப் பொலிஸாரைவிட சிங்களப் பொலிஸாரே அதிகம் இருந்தனர்.

அதன் விளைவாக பருத்தித்துறையிலும், மன்னாரிலும் அசம்பாவிதங்கள் நிகழ்ந்தது ஞாபகமிருக்கும். சிங்களப் பொலிஸாரை இடமாற்றம் செய்ய வேண்டிய தேவையைக் கருத்தில்கொள்ள வைத்தவை அந்தச் சம்பவங்களே.

தமிழ்ப் பகுதிகளில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு சிங்களப் பொலிஸார் தேவையில்லை. தமிழ்ப் பொலிஸார் இருந்தால் போதுமானது. வவுனியா, திருகோணமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களில், கணிசமான எண்ணிக்கையில் சிங்கள மக்களும் வாழும் மாவட்டங்களில், குறிப்பிட்ட வீதத்தில் சிங்களப் பொலிஸாரை கடமைக்கு அமர்த்துவது நியாயமானதே.

ஆனால் 1983 ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்தது போல, தமிழ்ப் பகுதிப் பொலிஸ் நிலையங்களில் சிங்களப் பொலிஸ்காரர்களை பெரும் எண்ணிக்கையில் கடமைக்கு அமர்த்துவதற்கு நினைக்கவும் கூடாது. அது நியாயமற்றதாகும்,

தமிழ்ப் பிரதேசங்களில் பெரும் எண்ணிக்கையான தமிழ்ப் பொலிஸாரும், சிங்களப் பகுதிகளில் பெரும் எண்ணிக்கையான சிங்களப் பொலிஸாரும் என்ற அடிப்படையில் பொலிஸ் சேவை அமையவேண்டும். பொலிஸ் சேவை சட்டத்தை அமுல் செய்யும் ஓர் இயந்திரம்.

எனவே சம்பந்தப்பட்ட பகுதி மக்களுடன் நல்லுறவுடனும், அன்னியோன்யமாகவும், புரிந்துணர்வுடனும் நடக்கக் கூடியவர்களே அந்தச் சேவைக்கு அமர்த்தப்பட வேண்டும்.

சிங்களப் பொலிஸார் தமிழ்ப் பகுதிகளுக்கு வந்து புரிந்துணர்வுடன் நடந்து கொள்வார்கள் என்றோ, தமிழ் மக்களுடன் நல்லுறவை வளர்த்துப் பேணுவார்கள் என்றோ உத்தரவாதம் கூற எவ்வித பாத்தியதையும் இல்லை. அவை அசாத்தியம் என்பதையே கடந்த காலச் சம்பவங்களும், ஏன் கடந்த மாதச் சம்பவங்களும் நிரூபிக்கின்றன.

எனவே இனிமேல் தமிழ்ப் பகுதிகளில் சட்டங்களை அமுல் செய்யும் பணி சிங்களவர்களிடம் ஒப்படைக்கக் கூடாது. தமிழர்களிடமே அந்தப் பொறுப்பு முழுதாகக் கையளிக்கப்பட்டுவிட வேண்டும். இதில் வேறு வாதத்துக்கோ, விளக்கத்துக்கோ, விமர்சனத்திற்கோ இடமிருக்கக் கூடாது; இடமிருக்கவும் முடியாது.

தமிழ்ப் பகுதிகளின் சட்ட அமுல் எவ்வாறு தமிழர்களிடம் ஒப்படைக்கப்படவேண்டுமோ. அவ்வாறே தமிழர்களின் பாதுகாப்பும் தமிழர்களிடம் கையளிக்கப்பட வேண்டும்.

தமிழர்களைப் பாதுகாக்கும் பணியைச் சிங்களவர்கள் செய்ய முடியாது. அது ஒவ்வாதது. அந்தப் பொறுப்புத் தமிழர்களுக்கே உரியது. எனவே சிங்களவர்களையே முற்றுமுழுதாகக் கொண்ட இராணுவம் தமிழ்ப் பகுதிகளில் இருப்பதில் எவ்வித நியாயமுமில்லை. அவையும் அகற்றப்பட வேண்டும்.

அதிகாரப் பரவல் செய்வதாகக் கூறி வெறும் சபைகளை உருவாக்கி, சாதாரண நிர்வாக வேலைகளை, திணைக்கள அலுவல்களைத் தமிழ்ப் பகுதிகளில் நடத்துவதால் தமிழர்கள் திருப்தி அடைந்துவிடமாட்டார்கள்.

தமிழர்களின் தாயகம், அவர்களின் பாதுகாப்பு, சுயநிர்ணய உரிமை என்பன உறுதி செய்யப்பட்டால் மட்டுமே தங்களைத் தாங்களே ஆளும் நிலைக்கு அத்திவாரம் இடமுடியும் என்பதில் நம்பிக்கை உடையவர்கள் தமிழர்கள். இதனை மனதில் இருத்தி, உணர்ந்து அரசு நடந்து கொள்வது அவசியம். அப்போது தான் ஓர் இணக்க சூழ்நிலையை இலகுவில் தோற்றுவிக்க முடியும்.

### விற்பனை திணைக்கள ஏற்பாட்டில்

## கால் இறாத்தல் பாண் விரைவில் விற்பனைக்கு!

கொழும்பு, மே 9

நூறு கிராம் எடையுள்ள பாண் விற்பனை செய்யும் திட்டம் அடுத்த வாரம் முதல் கொழும்பில்அமுலுக்கு வரவுள்ளது.

பின்னர் இத்திட்டம் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்படும் என்று உணவு, கூட்டுறவுத்துறை அமைச்சர் வீரசிங்க மல்லிமாராச்சி தெரிவித்தார்.

நூறு கிராம் எடை கால் இறாத்தலுக்கு சற்றுக் குறைவானதாகும்.

பொரளையில் உள்ள விற்பனைத் திணைக்கள பேக்கரியில் இப்பாண் தயாரிக்கப்படும்.

கூட்டுறவுச் சங்கக்கடைகள் மற்றும் தனியார் துறையினர் ஊடாக இப்பாண் விற்பனை செய்யப்படும்.

விற்பனையாளர்களுக்கு 10 சதவிதக் கழிவை விற்பனைத் திணைக்களம் வழங்கும்.

[உ-எ]

அராலி

# பம்பாய் வெங்காய உற்பத்திக்கு இலங்கை வங்கி கடன் வழங்கும்

அராலி மே 9

அராலி பம்பாய் வெங்காய உற்பத்தியாளருக்கு இலங்கை வங்கி உற்பத்திக்கடன் வழங்கவுள்ளது.

பம்பாய் வெங்காய உற்பத்தியாளர் சங்கத்தலைவர் திரு. நா. குகராசா இது தொடர்பான முயற்சிகளை மேற்கொண்டிருந்தார்.

சடனை பெற விரும்பும் விவசாயி பின்வரும் அடிப்படை தகமைகளை கொண்டு இருத்தல் வேண்டும்.

1. சங்கத்தில் அங்கத்தவராக இருத்தல் வேண்டும் அல்லது அங்கத்தவராக சேர்ந்து கொள்ளமுடியும்.

2. மானிப்பாய் இலங்கை வங்கி கிளையில் வாடிக்கையாளராக இருத்தல்வேண்டும் இல்லையேல் சேமிப்பு கணக்கு தொடங்குவதற்கு வகை செய்து கொடுக்கப்படும்.

3. கடன் பெறுபவருக்கு கமநல சேவைநிலைய காணி இடாப்பில் காணிப்பதிவு இருத்தல் வேண்டும். ஏற்கனவே ப. நோ. கூ. சங்கத்திலோ அல்லது வங்கியிலோ பயிர்ச் செய்கை கடன் பெற்று கட்ட தவறிய தவணை தப்பிய கடன்காரராக இருத்தல் கூடாது.

5. பயிர் செய்யப்படும் 2 பரப்புக்கு மேல் இரண்டு ஏக்கர்வரை கடன் பெற்றுக் கொள்ளமுடியும். (இ-12)

## நோர்வே உளவியல் நிபுணர் கலந்து கொள்ளும் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மே 09

நோர்வே நாட்டு றெட்பானா தாபனத்தின் சர்வதேச சேவைக்கு உதவும் நோக்கத்துடன் அந்நாட்டவரான சிறுவர் மனோவைத்தியக் கலாநிதி எலிஸபெத் ஜெறாக் இரண்டாம் தடவையாக மீண்டும் யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

இம்மாத ஆரம்பத்தில் யாழ் வருகை தந்த அவர் இன்று 9 ஆம் திகதி புதன்கிழமை மலை 5.30 மணிக்கு யாழ். செ ன். ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் ''யுத்தச்சூழலில் குடும்பங்களின் நிலை'' என்ற தலைப்பில் சிறப்பு விளக்கவுரை ஆற்றுவார்.

யாழ்ப்பாணத்தில் போர்க்காலச் சீரழிவுகளையும் பயங்கர நிகழ்வுகளையும் நேரில் கண்ணுற்று உளவியல் ரீதியாகக்சடும் பாதிப்புக்கு உள்ளான குழந்தைகள், விதவைகள், வறிய குடும்பங்கள் என்போரது நலன் கருதி ''போர்க்கால விதவைகளுக்கான திட்டம்'' ஒன்று 1988 இல் இருந்து றெட்பானாவினால் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இதன் சிரேஷ்ட நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளராக திரு. எஸ். சோதிராஜா என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை 117 வறிய விதவைக் குடும்பங்கள் இத்திட்டத்தின் மூலம் பயனுற்றன.

இலங்கை வந்திருக்கும் இவர் இம்முறை யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மட்டக்களப்பு ஆகியவற்றின் றெட்பானா தொண்டர்களைச் சந்தித்து கலந்துரையாடுவார்.

மேலும் யாழ் வைத்தியச் சங்கம் உளநல ஆற்றுப்படுத்தல்சங்கம்என்பவற்றின் உறுப்பினர்கள், பாடசாலை ஆசிரியர்கள் அதிபர்கள் ஆகியோர் மத்தியில் கலந்தாலோசனைகளையும் நடத்துவார். (இ-ப)

### யாழ். மாநகர சபை

## சனசமுக நிலையங்களின் சமாசம் நடத்தும் போட்டி

யாழ்ப்பாணம் மே 9

யாழ் மாநகரசபை சனசமுக நிலையங்களின் சமாசத்தின் கல்வி, கலை,கலாசாரக்குழு கட்டுரைப்போட்டி கவிதைப்போட்டி, சிறுகதைப் போட்டி, ஓவியப்போட்டி, நாடகப்போட்டி, ஆகியவற்றை நடத்தும்.

இவற்றுள் நாடகப் போட்டி மட்டும் அகில இலங்கை ரீதியில் நடத்தப்படவுள்ளது.

ஏனைய நான்கு போட்டிகளும், யாழ் மாநகரசபை சனசமூக நிலையங்களின் சமாசத்தின் கீழுள்ள சனசமூக நிலைய உறுப்பினர்கள் மத்தியில் நடத்தப்படும்.

மேலதிக விவரம் தேவைப்படுவோர் 23 சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணத்தில் இருக்கும் சமாச அலுவலகத்தோடு தொடர்பு கொள்ளும்படி கோரப்படுகின்றனர். போட்டி முடிவு இம்மாதம் 30ம்திகதி ஆகும்.

இந்தப் போட்டிகளுக்கான நடவடிக்கைகளை சமாசத்தின் கல்வி, கலை, கலாசாரக்குழுத் தலைவர் கவிஞர் தேவதாசனும், செயலாளர் இ. இரவீந்திரராசாவும்மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## விக்கிரகம் சேதமுறாத அதிசயம்!

வல்வெட்டித்துறை மே 9

ஆலயம் ஷெல் வீச்சினால் சேதமுற்றது. மண்டபங்கள் சிதைவுற்றன. ஆனால் எழுந்தருளி விக்கிரகம், ஒரு சிறு கீறல் தானும் இல்லாமல் இடிபாடுகளின் மத்தியில் கண்டு எடுக்கப்பட்டுள்ளது.

தெய்வத்தின் மகிமை இது தான் என்று பருத்தித்துறை மக்கள் பரவசம் அடைகிறார்கள்.

பருத்தித்துறை பெரியபிள்ளையார் என்றழைக்கப்படும் கொட்டடிப்பிள்ளையார் கோவில்,ஸ்ரீலங்கா இராணுவ முகாம் விஸ்தரிக்கப்பட்டதனால் கடந்த பல வருடங்களாக இராணுவ முகாமுக்குள் உள்ளடக்கப்பட்டிருந்தது.

அப்போது இராணுவத்தின் ஷெல் தாக்குதல்களுக்கு இலக்கானது. எழுந்தருளி மூர்த்தி இருந்த மண்டபமும் சிதைக்கப்பட்டிருந்தது. பின்னர்இப்பகுதி இந்திய ராணுவத்தால் பொறுப் பேற்கப் பட்டது.

இந்திய ராணுவம் வெளியேறியதை அடுத்து மேற்படி விக்கிரகத்தைக் காணாது தேடும் முயற்சியில் கோயில் நிர்வாகசபையினர் ஈடுபட்டிருந்தனர். இறுதியாக கோயில் இடிபாடுகளின் மத்தியில் இருக்கக்காணப்பட்டது. என்னே ஆச்சரியம் எழுந்தருளி மூர்த்தியில் ஒருவித கீறல் கூடக் காணப்படவில்லை! (அ-160)

## வசந்தபுரம் மக்களின் குடிதண்ணீர்பிரச்சினைதீர்ந்தது

### 600 கலன் கொள்ளக்கூடிய தொட்டி அமைப்பு

யாழ்ப்பாணம், மே 9

யாழ். மாநகர எல்லைக்கு உட்பட்ட வசந்தபுரம் மக்களின் நீண்டகால குடிதண்ணீர் பிரச்சினை தீர்த்து வைக்கப்பட்டுள்ளது. இங்கு 600 கலன் தண்ணீர் கொள்ளக்கூடிய தொட்டி ஒன்று மாநகர சபையால் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. தண்ணீர் விநியோகத்தை யாழ். மாநகர ஆணையாளர் திரு. பொ. பாலசிங்கம் நேற்று முன்தினம் சனிக்கிழமை ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சிக்கான ஒழுங்குகளை அண்ணா சன சமூக நிலையத்தினர் மேற்கொண்டிருந்தனர். இந்தத் தொட்டியில் நாளாந்தம் பவுஸர்மூலம் தண்ணீர் நிரப்பப்படும்.

வசந்தபுரம் மக்களின் வீட்டுப் பிரச்சினை, சுகாதாரப் பிரச்சினை, மின் விநியோகப் பிரச்சினை முதலியவற்றைத் தீர்க்க தம்மால் முடிந்த அளவில் ஆவன செய்வதாக ஆணையாளர் கூறினார்.

இப்பகுதி சுகாதாரப் பரிசோதகர் திரு. பெ. துரைராசா தமதுரையில் சுகாதாரப் பிரச்சினைகளை பொது மக்களின் ஒத்துழைப்புடன் தீர்க்க ஆவன செய்வதாகவும், கழிவுப் பொருள்களையும் மற்றும் மிருகங்களின் கழிவுப் பொருட்களையும் அகற்றி சுற்றாடல் பாதிக்கப்படாத வகையில் ஆவன செய்வதாகவும் உறுதி அளித்தார்.

இந்நிகழ்ச்சியின்போது மாநகர சபை வேலைப் பகுதி பொறியியலாளர், தண்ணீர் விநியோக வடிகாலமைப்பு பொறியியலாளர் ஆகியோரும் உரையாற்றினர். [இ-18]

## சத்ய சாயி சேவா சமித்தி கூட்டிணைக்கச் சட்டம்

கொழும்பு மே 9

பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா சமித்தி நம்பிக்கைப் பொறுப்பிணைத்கூட்டினைப்பதற்கான சட்டவரைவு ஒன்று விரைவில் நாடாளுமன்றத்தில் இந்து கலாசார, சமய, தமிழ் அலுவல்கள் அமைச்சர் பி. பி. தேவராஜ் சமர்ப்பிப்பார்.

இந்த நம்பிக்கைப் பொறுப்பினை கூட்டிணைப்பதற்கான நோக்கங்கள் வருமாறு;

1. பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபாவின் செய்தியையும்போதனைகளையும் பரப்புதல்.

2. வேதங்கள், உபநிடதங்கள், சாத்திரங்கள், புராணங்களின் அறிவைப் பரப்புதல்.

3. சகல மதங்களினதும் மிகச் சிறந்த நன்னெறி சார்ந்த கோட்பாடுகளை ஆராய்தல், அவற்றைப் பரப்புதல்.

4. அடிப்படைக் கோட்பாடுகளான சத்தியம், தர்மம், சமாதானம், அன்பு ஆகியவற்றைப் பரப்புதல். (உ-எ)

## நாணய மாற்று விகிதம்

07-05-1990

இலங்கை மத்திய வங்கிக்கும் வர்த்தக வங்கிகளுக்கும் இடையிலான உடன் மாற்றுவிகிதம்:-

| | | வாங்குதல் | விற்றல் |
|---|---|---|---|
| 100 | இந்திய ரூபா | 230.37 | 231.33 |
| 100 | அமெரிக்க டொலர் | 3997.15 | 4002 80 |
| 100 | ஸ்ரேர்லிங் பவுண்ட் | 6538 29 | 6653.52 |
| 100 | ஜேர்மன் மார்க் | 2398.16 | 2414.61 |
| 100 | பிரெஞ்சு பிராங்க் | 710.37 | 722.22 |
| 100 | ஜப்பானிய யென் | 25.2132 | [illegible] |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போருட் கிராமியவங்கி

வல்வெட்டித்துறை மே 9

இன்பருட்டி வாசிகளின் நலன்கருதி வல்வெட்டித்துறையில் ஒரு கிராமியவங்கி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

போரூட் நிறுவன ஆதரவுடன் இயங்கவுள்ள இவ்வங்கி போரூட் கிராமிய வங்கி எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. (ப-160)

## பௌர்ணமிவிழா

அரியாலை, மே 9

அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையத்தில் பௌர்ணமி கலை விழா இன்று இரவு 7.00 மணியளவில் நடைபெறும். [இ]

## 41 ஆவது ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், மே 9

நல்லூர் தெற்கு சனசமூக நிலைய 41 வது ஆண்டு நிறைவுவிழா இன்று புதன் கிழமை கொண்டாடப்படுகிறது.

காலை நிகழ்ச்சிகளாக 5 மைல் மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டப் போட்டிகள், விளையாட்டுப் போட்டிகள் மற்றும் விநோத உடைப்போட்டி என்பன நடைபெறவுள்ளன.

இரவு நிகழ்ச்சிகளாக 'கலியுக விசித்திரங்கள்' என்ற பெண்களின் வில்லுப் பாட்டும், நாடகங்களும் இடம் பெறவுள்ளன. [ஒ]

### சமய நிகழ்ச்சிகளில்

## இன்று தீர்த்தத் திருவிழா

கொக்குவில் மே 9

அல்வாய் ஆலடி விநாயகர் ஆலயத்தில் இன்று புதன் கிழமை தீர்த்தத் திருவிழா நடைபெறும்.

11ஆம் திகதி வெள்ளிக் கிழமை அல்வாய் மனோகரா இந்து இளைஞர் நடாத்தும் சிறப்புத் திருவிழாவும், 13ம் திகதி மகேசுவர பூசையும் இடம் பெறும்.

சிறப்புத்திருவிழா தினத்தன்று மறைந்த தவில்மேதை தட்சணாமூர்த்தியின் புதல்வனின் தவில் கச்சேரியும், அருணா மெல்லிசைக்குழுவினரின் இசை நிகழ்ச்சியும் நடைபெறும். (க-69)

## தீர்த்தோற்சவம்

பச்சிலைப்பள்ளி மே 9

வயாவிளான் மானம்பிராய் பிள்ளையார் ஆலய ரதோற்சவம் நேற்று இடம் பெற்றது இன்று தீர்த்தோற்சவம் நடைபெறும்.

1985ஆம் ஆண்டுச்குப் பின்னர் இவ்வாண்டே திருவிழா நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (இ-117)

## வற்றாப்பளை கண்ணகி அம்பாள்

யாழ்ப்பாணம் மே 9

வற்றாப்பளை கண்ணகி அம்பாள் ஆலய பாக்குத் தண்டல் வைபவம் இம்மாதம் 28ஆம் திகதி திங்கட்கிழமையும். தீப தீர்த்த விழா ஜூன் மாதம் 4ஆம் திகதியும் பொங்கல் விழா ஜூன்மாதம் 11ம் திகதியும் நடைபெறும். (இ-7)

### வாசகர் திருமுகம்

## யாழ் வீதி மின் விளக்குகள்

யாழ் மாநகரசபை அனேக வரியிறுப்பாளர்களுக்குப் பாரபட்சம் காட்டுவதேன்? குழப்ப காரணங்களினால் வேலைகள் தடைப்பட்டன. இதை வரியிறுப்பாளர்களும் ஏற்றுக்கொண்டனர்.

முந்திய ஆணையாளர் எல்லா வீதிகளுக்கும் ரியுப் லைட் (Tube Light) போடப் போவதாகக் கூட்டங்களில் சொன்னார். மின்சார சேவையைச் சீர்படுத்துவதற்கு வெளிநாட்டு உதவி கிடைத்தது பங்குனி முடியுமுன் மின்சார வியோகம் முற்றாகச் சீராகும் என்கிறார்கள். பங்குனி போய் சித்திரையும் முடிந்து வைகாசியும் தொடங்கிவிட்டது ஆனால் வேலைகள் முற்றுப்பெறவில்லை.

இத்துடன் இன்னும் வெளிநாட்டு உதவி கிடைக்கும் என்று அறிகிறோம். வேலைகள் முற்றுப்பெறாவிட்டால் இன்னும் வெளிநாடுகள் உதவுமா? கிடைத்த உதவியைக் கொண்டு சில பிரதான மற்ற வீதிகளுக்கு ரியுப்லைட் போட்டும் சிலவற்றிற்கும் ஒவ்வொரு தாணுக்கும் வெளிச்சம் போட்டிருக்கும் சமயம் எத்தனையோ சந்திகள், வீதிகளில் முற்றாக வெளிச்சம் இல்லை இவ் வீதிகளில் வசிப்பவர்கள் வரி செலுத்துவதில்லையா? இப்படியான பாரபட்சங்களை ஆணையாளர் நீக்குவாரா?

வரியிறுப்பாளர்கள்

## சேலை அணிந்து ஆலயம் செல்ல வேண்டும்

தமிழ்ப் பெண்கள் சேலை கட்டியே பணியகத்துக்கு செல்ல வேண்டும் அதுபோலவே ஆசிரியைகளும் சேலை அணிந்து பாடசாலைகளுக்குப் போதல் வேண்டும். ஏன்? சைவாலயங்களுக்கும் பெண்கள் சேலை அணிந்து சென்றால் எமது பண்பாட்டினை நாம் பேணுபவர்களாவோம்.

இந்த விடயத்தில் கல்விப் பணிப்பாளர் அண்மையில் முன்வைத்த புத்திமதி பாராட்டுக்கிரியது.

சைவாலயங்களை நிர்வகிப்பவர்கள் எப்படி ஆண்களை மேலங்கிகளுடன் உட்பிரவேசிக்க தடை விதிக்கிறார்களோ அப்படியே பெண்களையும் சேலை கட்டி வரா விட்டால் தடைசெய்ய வேண்டும் என்று சைவப்பெருமக்கள் பிரச்சாரஞ் செய்தல் அவசியம்.

சைவன்,
மானிப்பாய்.

## செய்திக்கொத்து

### படகுசேவைக்கு பாராட்டு

நெடுந்தீவு மே 9

நெடுந்தீவு - குறிக்கட்டுவான் கடற்போக்குவரத்துச் சேவைக்கென புதியபடகு வழங்கியதுக்காக ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா, போக்குவரத்து அமைச்சர் திரு. விஜயபாலமென்டிஸ் ஆகியோருக்கு நெடுந்தீவு பிரதேசசபை விசேட ஆணையாளர் திரு. சி. இராசதுரை பாராட்டுகளைத்தெரிவித்து உள்ளார். (ப-111)

### தேவன் வீதி

நெடுந்தீவு மே 9

நெடுங்கேணிமுல்லைத்தீவுபிரதான வீதியிலுள்ள பெண்கள் விவசாயத்திட்ட வீதிக்கு மறைந்த விடுதலைப்புலிகளின் உறுப்பினர் தேவன் ஞாபகமாக தேவன் வீதி என பெயர் சூட்டப்பட்டு சந்தியில் தேவன் படிப்பகம் ஒன்றும் திறந்துவைக்கப்பட்டுள்ளது. (இ-108)

### பணிப்புலத்தில் அன்னதானமடம்

யாழ்ப்பாணம் மே 9

பணிப்புலம் முத்துமாரியம்பாள் கோயிலில் அன்னதான மடம் ஒன்றும் அதன் அருகே பாரிய நீர்த்தாங்கி ஒன்றும் கட்டப்பட்டுவருகின்றன.

பொதுமக்களிடமிருந்து திரட்டப்பட்ட நிதியைக் கொண்டு அமைக்கப்படும் இந்தமடம் இவ்வாண்டு கோயில் திருவிழாவின்போது திறந்துவைக்கப்படும். (இ-ப)

### ரயிலில் இடநெருக்கடி

அம்பாறை மே 9

மட்டக்களப்பு - கொழும்பு இரவு தபால் ரயில் பயணிகளின் எண்ணிக்கை சமீப நாட்களில் முன்னெப்போதும் இல்லாத வகையில் அதிகரித்திருக்கிறது. (ப-14)

### அன்னைவீதிக்கு இரவில் ஒளியில்லை

கோப்பாய், மே 09

கோப்பாயில் அன்னை பூபதி வீதிக்கு மின் விளக்கு தாங்கும் தூண்கள் இடப்பட்டிருந்தும் அவற்றில் இன்னமும் விளக்குகள் பொருத்தப்படவில்லை. (ப72)

### ஆலயமணி அன்பளிப்பு

முல்லைத்தீவு, மே. 9

முல்லைத்தீவு கள்ளப்பாடு பகுதியைச் சேர்ந்த திருமதி இன்னேசியாப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை என்பவர் அண்மையில் செல்வபுரம் அருள்மிகு யூதா ஆலயத்துக்கு 2500 ரூபா பெறுமதியான ஆலயமணி ஒன்றை நன்கொடையாகத் கொடுத்தார். (ப - 92)

# அமெரிக்க அரசுடன் பேச்சா? இல்லை என ஈரான் அறிவிப்பு!

நிக்கோஸியா மே

அமெரிக்காவுடன் எந்தப் பேச்சுக்களையும் நான் அனுமதிக்கப்போவதில்லை.

ஈரானின் ஆத்மீகத்தலைவர் ஆயதுல்லா அலிகாமெனி முன்கண்டவாறு ஆசிரியர் குழு ஒன்றிடம் பேசுகையில் தெரிவித்தார்.

லெபனானில் பயணக் கைதிகளாக வைத்திருக்கப்படும் மேற்குநாட்டவரின் விடுதலைக்காக ஈரான் தொடர்ந்து பாடுபடும்.

அமெரிக்காவின் நலன்களைப் பேண ஈரான் இதில் ஈடுபடவில்லை. மனிதாபிமானக் கடமையாகவே இவ் விஷயத்தில் ஈரான் ஈடுபடுறது.

இதற்காக அமெரிக்காவுடன் பேச்சுக்கள் நடத்தவோ அல்லது ராஜரீக உறவுகளைவைத்துக் கொள்ளவோ நாம் தயாராக இல்லை.

இப்படி ஆயதுல்லா அலிகாமெனி சொன்னார். (எ)

# தன்னந்தனியே நடந்து சென்று வடதுருவம் அடைந்த இளைஞர்

ஒஸ்லோ மே 8

தன்னந்தனியே நடந்து சென்று வட துருவத்தை அடைந்த முதல் மனிதர்கள் என்ற சாதனையை இரண்டு நோர்வே இளைஞர்கள் ஏற்படுத்தினர்.

நாய்கள், கழுதைகள், பனிஸ் கூட்டர்கள், மின் விசைப் படகுகள் மற்றும் விமானங்களின் உதவி எதுவுமின்றி இப் பனிக் கண்டத்தை 500 மைல் நடந்து சென்று இருவரும் கடந்த சனிக்கிழமை மாலை அடைந்தனர்.

''வட துருவத்தை அடைந்து விட்டோம்'' என்று எர்ளிங் காகே, போபேர்ஜ் அவுஸ்லாந்து ஆகிய இரண்டு இளைஞர்களும் வானொலி மூலம் கனடாவுக்கு அறிவித்தனர்.

இது போன்று எவ்வித உதவியுமின்றி வட துருவத்தை அடைய முன்னர் 13 தடவைகள் முயற்சி மேற் கொள்ளப் பட்டது. அனைத்தும் தோல்வியில் முடிந்தன.

நோர்வே இளைஞருக்கு முன்னர் வட துருவம் சென்ற குழுவை சைபீரியாவில இருந்து புறப்பட்ட பிரிட்டிஷ் குழு இடை வழியில் ஒரு வாரம் முன்பதாகவே முயற்சியைக் கைவிட்டது.

நோர்வே இளைஞரின் பயணம் சென்ற மார்ச் 8 ஆம் திகதி கனடாவின் வட பகுதியில் இருந்து ஆரம்பமானது இக் குழுவைச் சேர்ந்த மூன்றாவது நபர் செய்ர் ரான்ட்பை, விழுந்ததால் காயமடைந்தார். அதன் காரணமாக அவரை பத்து நாட்கள் முன்பதாகவே விமானம் ஒன்று அப்பகுதிக்குச் சென்று அவரைக் கனடாவுக்குக் கொண்டு வந்தது.

வட துருவத்தை அடைந்த இரண்டு நோர்வே இளைஞர்களையும் விமானம் ஒன்று கடந்த திங்கட்கிழமை ஏற்றி வர இருந்தது. (எ)

## புலவர்களுக்கு நினைவுத்தூபி

சென்னை. மே 8

சங்க காலப் புலவர்களின் நினைவைப் போற்றும் வகையில் நினைவுத்தூண் நிறுவும் திட்டத்தைதமிழ்நாடு அரசு செயல்படுத்த உள்ளது.

முதல் நிலையாக செங்கை- அண்ணா, தஞ்சாவூர், திருச்சி, பசும்பொன் தேவர் திருமகன் ஆகிய நான் குமாவட்டங்களில்நினைவுத் தூண்கள்நிறுவப் பெறும்.

இத்தகவல்களை கல்வி அமைச்சர் அன்பழகன் தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத்துறை மாணியக் கோரிக்கை குறித்தான கொள்கை விளக்கக்குறிப்பில் கூறியுள்ளார்.

சங்க காலப் புலவர்களின் நினைவைப் போற்றும் வகையில் நினைவுத் தூண் நிறுவத் திட்டமிடப் பட்டுள்ளது.

சங்க காலப் புலவர்களுள் ஏறக்குறைய 200பேரின் பிறந்த இடங்கள் தெரியவந்துள்ளன.

இவர்களுள் புகழ்பெற்ற புலவர்களின ஊர்களில் நினைவுச் சின்னம் நிறுவப் பெறும் என்றும் அக் குறிப்பில் கல்வி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்

அந்த நல்லிசைப் புலவர் களின் சிறந்த பாடலும் கல்வெட்டாகச் செதுக்கி வைக்கப்படும்.

இத்திட்டம் படிப்படியாக சில ஆண்டுகளில் நிறைவேற்றப்படும். முதல் நிலையாக நான்கு மாவட்டங்களில் அமையும்சங்கச்சான்றோர் நால்வர் பிறந்த ஊர்களில் கற்றூண்கள் நிறுவி அவர்களது பாடல் பகுதிகளைப் பொறிக்கும் முயற்சி தொடங்கப்பட்டுள்ளது என்று அக்குறிப்பில்கூறப்பட்டுள்ளது. [எ 4]

## முதல் உப ஜனாதிபதி

காபூல் மே 08

ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி டாக்டர் நஜிபுல்லா முதல் தடவையாக உப ஜனாதிபதி ஒருவரை நியமித்திருக்கிறார்;

சர்வதேச நாணய சபைக்கு

# வறிய நாடுகள் செலுத்தத்தவறிய கடனாக 20 ஆயிரம் கோடி ரூபா!

## அறவிடுவதில் கடும் போக்கு காட்டுமாறு அமெ. கோரிக்கை

வாஷிங்டன், மே 8

மூன்றாம் உலக வறியநாடுகளுக்குவழங்கப்பட்ட கடனை அறவிடுவதில் சர்வதேச நாணய சபை கடுமையான போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று அமெரிக்கா கேட்டுள்ளது.

அமெரிக்க நிதி அமைச்சர் வில்லியம் பிரேடி நேற்று சர்வதேச நாணயசபையின் ஆலோசனைக் கூட்டத்தில் இதனை வலியுறுத்தினார்.

சர்வதேச நாணயச்சபையின் விதிகள், கொடுக்கப்பட்ட கடனை திருப்பி அறவிடுவதை உறுதிப்படுத்துமுகமாக மாற்றி அமைக்கவேண்டும் என்றும் அமெரிக்க நிதி அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

இக் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டால் ஏற்கனவே கடன்பெற்ற மூன்றாம் உலக வறிய நாடுகள் உலக நிதி ஸ்தாபனங்களிடமிருந்து மேலும் கடனைப் பெறமுடியாத நிலை ஏற்படும் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டது.

மூன்றாம்உலகத்தைசேர்ந்த 11 வறிய நாடுகள் சர்வதேச நாணயசபையிடமிருந்து பெற்ற 400 கோடி டாலர் (இலங்கைப்பணத்தில் 20 ஆயிரம் கோடி ரூபா) கடன் இன்னமும் திருப்பிக் கொடுக்கப்படாமல் உள்ளது.

இது நாணயச்சபையின் நிர்வாகக் கட்டமைப்புக்கு விடப்பட்ட அடிப்படையான சவாலாகும் என்றும் அமெரிக்க நிதி அமைச்சர் வர்ணித்தார்.

மூன்றாம் உலக நாடுகள் ஏழு கைத்தொழில் வளர்ச்சி பெற்ற நாடுகளிடமிருந்து வாங்கிய கடனைத் திருப்பி வழங்காமல் இருப்பது குறித்தும் அமெரிக்க அமைச்சர் கவலை தெரிவித்தார்.

சர்வதேச நாணய சபையின் வளங்கள் மேலும் 50 சதவீதத்தால் அதிகரிக்கப்பட வேண்டும். கிழக்கு ஐரோப்பிய நாடுகள் மற்றும் மூன்றாம் உலகநாடுகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய இந்த அதிகரிப்பு அவசியமாகிறது என்றும் அமெரிக்க அமைச்சர் பிரேடி சொன்னார்.

★ தமிழகத்தில்

# பனம் தொழிலுக்கு தனிக் கூட்டுத்தாபனம்

சென்னை, மே 8

பனம் தொழிலுக்கு தமிழகத்தில் தனிக் கூட்டுத்தாபனம் (வாரியம்) அமைக்கப் படுகிறது.

இத்தகவலை சட்டசபைக் கூட்டத்தில் அமைச்சர் சுப்புலட்சுமி வெளியிட்டார்.

பனம் தொழிலாளர் நலன் கருதி பனைத்தொழில் வாரியம் அமைக்கும் திட்டம் அரசிடம் உண்டு.

தமிழ்நாட்டில் ஆயிரத்து 131 ஆரம்பப் பனைப் பொருள் கூட்டுறவுச் சங்கமும், மாவட்ட அளவில் ஐந்து சம்மேளனங்களும் மாநில அளவில் பனம் பொருள் நிலையம் ஒன்றும் உள்ளன — என்றார் அவர். (ஒ - எ)

## குண்டு வெடிப்பில் 11 பேர் பலி!

லாகூர், மே 8

லாகூரில் ரயில் ஒன்றில் வைக்கப்பட்ட குண்டு ஒன்று வெடித்ததில் 11 பேர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப் பட்டது.


குமுலுஸ் D.F. போட்டி

BASF
குமுலுஸ் D.F.
பாவித்து மிளகாய் செய்கையில் அதிக விளைவு பெறுவதோடு பரிசுகளையும் பெறுங்கள்

| | |
|---|---|
| நப்சாக் தெளி கருவி — | 5 |
| ஸ்போட்ஸ் துவிச்சக்கர வண்டி — | 5 |
| கைத்தெளி கருவி — | 5 |
| சிறிய வானொலிப்பெட்டி — | 20 |
| எவரெடி ரோச் லைற் — | 48 |
| ரீ சேட் — | 100 |

மிகவும் இலகுவாக இந்த போட்டியில் பங்குபற்றலாம். நீங்கள் செய்ய வேண்டியது.

1. மேழயுள்ள கூப்பனை அல்லது குமுலுஸ் DF பைக்கற்றுகளிலுள்ள கூப்பனை நிரப்பி, குமுலுஸ் பைக்கற்றுகளின் மேல்பகுதியை வெட்டி ஒவ்வொரு கூப்பனுடனும் 5 குமுலுஸ் மேல்பகுதிகளை சேர்த்து. பின்லே கெமிக்கல்ஸ் அன் டைஸ் (பிரைவேட்) லிமிட்டெட், 186 வக்சோல் வீதி, கொழும்பு 2 என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். ஒருவர் பலமுறை அனுப்பலாம்.
2. தபாலுறையின் இடதுபக்க மேல்பகுதியில் ''குமுலுஸ் DF போட்டி'' என எழுதவும்.
3. போட்டியின் முடிவு திகதி 30-06-1990
4. போட்டியின் அதிஸ்டசாலிகளின் பெயர்கள் பத்திரிகை மூலமும் கடிதம் மூலமும் அறிவிக்கப்படும்.
5. பின்லே கெமிக்கல்ஸ் ஊழியர்களும், பேர்ஸ்ற் அன் போவேட் லிமிட்டெட் ஊழியர்களும் இந்த போட்டியில் பங்குபற்றமுடியாது.







வெட்டி அனுப்பவேண்டிய பகுதி

பெயர் ____
முகவரி ____
வியாபாரியின் பெயர் ____
முகவரி ____

FINCHEM AGRO DIVISION
பின்லே கெமிக்கள்ஸ் அன் டையிஸ் (பிரைவெட்) லிமிட்டெட்
(விவசாய இரசாயன பகுதி)
186. வக்சோல் வீதி, கொழும்பு 2.

Licence No S/731

பீடை நாசினிகள் அபாயகரமானவை கவனமாக கையாளவும்.

★ COMPUTER COURSES ★
DIPLOMA IN BASIC PROGRAMMING
புதிய பிரிவுகள்
12 - 05 - 1990 (Sat & Sun Batch)
16 - 05 - 1990 (Wed & Thu Batch)
நேரம் 9 30 a.m இல் ஆரம்பமாகும்
I.D.P. COMPUTER CENTRE
342, K. K. S. Road, Jaffna
Branch:- 7th MILE POST MALLAKAM
மல்லாகம் கிளையிலும் புதிய பிரிவுகள்
பி. ப. 4. 00 மணிக்கு ஆரம்பமாகும்
(சி/4369)

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்
**வல்லிபுரம் முருகையா [குரு]**

பிறப்பு: 10 - 06 - 1964 இறப்பு: 09 - 05 - 1985


எங்கள் அன்பின் குருவே!
தூய மனம் படைத்தவரே! எங்களை
பிரிந்து தொலை தூரம் சென்றதேனோ!
உங்கள் வரவை எதிர்பார்த்து விழியெல்லாம்
பூத்துவிட்டதையா
போனபாதை திரும்பிவிடாமல்
அந்நிய அரக்கர் கூட்டம்
துப்பாக்கி என்னும் நோயால் உங்களை
கொல்லெனக் கொன்றதுவோ குருவே!
ஆ! இப்பாவியை கண்ணில்லாப் பாதகர்கள்
இப்படி சதி செய்தார்களே

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கிறோம்.

உங்கள் பிரிவால் தவிக்கும்
வல்லிபுரம் குடும்பத்தினர்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

கரும்பியோடை, சமரபாகு,
வல்வெட்டித்துறை. [3518]

## ஐந்தாண்டு நினைவஞ்சலி



**மனோகரன் [பரன்]**
அவர்கள்

தாயின் மடியில்: 10 - 10 - 1963 தாயக மண்ணில் 09 - 05 - 1985

எமது செல்வமே! நீர் எங்களைப் பிரிந்து ஆண்டு ஐந்து சென்றாலும் எமக்கு இது ஒரு கனவுதான் உனது செல்லப் பேச்சும், சிரிப்பும், அம்மா என்ற அன்புக்குரலும் எங்கள் உள்ளங்களில் நிறைந்து நிலையாகிவிட்டது. உமது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அம்மா, அப்பா, அண்ணன்மார்,
அண்ணி, அக்கா, அத்தான், தம்பி,
தங்கை, தோழர்கள்.

கரம்பன் தெற்கு.
ஊர்காவற்றுறை. (3522)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித சக்தியைப் பயன்படுத்தி வருவாயைப் பெற வேண்டும்

## வவுனியா அரச அதிபர் உரை

சேமமடு, மே 9

"மக்கள் சகலதுக்கும் அரச உதவியை எதிர்பார்த்திருக்கக் கூடாது. மனித சக்தியைப்பயன்படுத்தி வருவாயைப்பெருக்க அவர்கள் பாடுபடவேண்டும். அதற்கான மன மாற்றத்தையும் செயற்திறமையையும் கிராம மன்றங்களும் தலைவர்களும் உருவாக்க வேண்டும்."

வவுனியா மாவட்ட கிராம அபிவிருத்தி, மாதர் அபிவிருத்திச்சங்க உத்தியோகத்தர்களுக்கான கருத்தரங்கிலும் கலந்துரையாடலும் தலைமை வகித்த வவுனியா மாவட்ட அரச அதிபர் திரு. செ. பத்மநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

வவுனியா மாவட்டதிட்டமிடல் பணிப்பாளர் திரு. எஸ். ரங்கராஜாகருத்தரங்கில் கிராம மட்டத்தில் கிராம அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்துவது பற்றி விவரமாக விளக்கினார்.

வவுனியா மாவட்ட விவசாயப் பணிப்பாளர் பிரதிநிதி திரு. கணேசலிங்கம், வவுனியா மாவட்ட உதவிக்கோட்ட ஆணையாளர் திருமதி. எமல்டா அற்புதநாதன், திரு. தி. ஜி. சிவபாதசுந்தரம் ஆகியோரும் கருத்தரங்கில் உரைநிகழ்த்தினார்கள் (க-37)

# நெடுந்தீவு மேற்குபகுதிக்கு குழாய் நீர் விநியோகம்

## இணறுகளைப் புனரமைக்கவும் திட்டம்

நெடுந்தீவு மே 9

நெடுந்தீவு மேற்குப் பகுதிக்கு குழாய் மூலம் குடிதண்ணீர் விநியோகிக்கப்பட உள்ளது.

இதற்கென திட்டம் வகுக்கப் பட்டுள்ளதாகவும் காராப்பிட்டியில் ரூபா ஒன்றரை லட்சம் செலவில் பாரிய கிணறு ஒன்று தோண்டப்பட இருப்பதாகவும் நெடுந்தீவு பிரதேசசபையின் விசேட ஆணையாளர் திரு சி. இராசதுரை தெரிவித்தார்.

கிழக்கு மத்திய பகுதிகளில் உள்ள நன்னீர்க் கிணறுகளும் புனரமைக்கப்படவுள்ளன. நீர் விநியோகத் திட்டத்திற்கென வரவு செலவுத் திட்ட ரீதியில்இருந்து யாழ்ப் பாணம் தீவுப்பகுதி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுமார் ஆறு லட்சம் ரூபா வரை வழங்கியுள்ளனர் என்று தெரிய வருகிறது. [இ-111]

## சாதனை வீரன் நற்குணம்

பளை மகா வித்தியாலயத்தின் நல்ல அறுவடையான நற்குணம் சமாதானக் கருத்தைசைக்கிளில் கொண்டு சென்ற வேளையில் வெறியின் கீழ் அகப்பட்டு அகால மரணம் அடைந்த செய்தி காலம் கழிந்தாலும் ஆறாத் துயர் தரும் நிகழ்ச்சியாகும்.

விளையாட்டுப் போட்டியிலே விவேகம்; கலைத்துறை மேடைகளில் கணீர் ஓசை; காவியம் படைக்கும் ஓவியங்கள்.

இவை சாரணியப் பாசறையில் நற்குணத்தின் சாதனைகள்.

"எதற்கும் தயாராக இரு" என்ற சாரணியத்தின் தாரக மந்திரத்துக்கு இலக்கணமாக விளங்கினார் அவர்.

மறைந்த ஆசிரியர் நற்குணம் பளை மகாவித்தியாலயத்துக்கும் பச்சிலைப்பள்ளி பிரதேசத்துக்கும் சாரணர் இயக்கத்துக்கும் பெருமையாகத் திகழ்ந்த ஒருவர் ஆவார்.

—அ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி

## வருமானத்தில் ஐந்தில் ஒரு பகுதி மது, சிகரெட் பாவனையால்

கொழும்பு, மே 9

நாட்டின் வருமானத்தில் ஐந்தில் ஒரு பகுதி மதுபாவிப்பவர்கள் சிகரெட் புகைப்பவர்கள் மூலம் தான் அரசுக்குக் கிடைக்கிறது.

கடந்த ஆண்டு மது, சிகரெட் ஆகியவற்றின் விலை அதிகரிக்கப்பட்டும் புகைப்பவர்களும் மது பாவிப்பவர்களும் தங்கள் பாவனையைக் குறைக்கவில்லை என்று மத்திய வங்கியின் புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

இந்த இரண்டு ரக பாவனையாளர்களால் கடந்த ஆண்டு அரசுக்கு 600 கோடி ரூபா வருமானமாகக் கிடைத்துள்ளது என்று மத்திய வங்கியின் தகவல் ஒன்று தெரிவிக்கின்றது.

கிராம இளைஞர் மத்தியில் புகைப்பது அதிகரித்து வருவதாக விஞ்ஞானிகள் நடத்திய ஆய்வு ஒன்றில் தெரிய வந்துள்ளது. (இ-எ)



ஆலயமணி வெளியீட்டகம் இலவசமாக வெளியிட்ட இந்திய தத்துவ சாஸ்திரமான தர்க்ககௌமுதி, புங்குடுதீவைச் சேர்ந்த திருமதி சிவக்கொழுந்து சண்முகநாதன் நினைவாக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் திரு. அ. துரைராஜாவிடம் புலவர் ஈழத்துச் சிவானந்தனால் ஒப்படைக்கப்பட்டது. அருகில் நிற்பவர் திரு. கனகசபாபதி நாகேஸ்வரன் (இ)

## மக்களுக்கு சேவை செய்யவே கூடுதல் கிராம சேவகர்கள்

மக்களின் தேவைகளை சீராக செய்து முடிக்க இயலாமல் இருந்தமையால் தான் கூடுதலான கிராம சேவையாளர்கள் நியமிக்கப்பட்டு அவர்களின் எல்லைகள் வரையறுக்கப்பட்டுள்ளன. இதனால் மக்கள் தமது தேவைகளை உடனுக்குடன் பூர்த்தி செய்ய வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

நீர்வேலி காமாட்சியம்மாள் கோவில் முன்றலில் நீர்வேலி வடக்கு கிராம சேவகர் காரியாலயத்தைத் திறந்து வைத்து உரையாற்றுகையில் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். முருகேசபிள்ளை இவ்வாறு குறிப்பிட்டார்.

கிராம சேவையாளரின் பணி மிகவும் முக்கியமானதெனவும், இது பாரபட்சம் இல்லாமல் மிகவும் புனிதமாக அமையவேண்டுமெனவும், அப்போது தான் மக்கள் திருப்தியான சேவையைப் பெறலாமெனவும் மேலும் அவர் தெரிவித்தார்.

இவ்விழாவில் திரு. த. பரராசசிங்கம், திரு. கு. தியாகராஜசர்மா உட்படப்பலர் பேசினார்கள்.

கிராம சேவையாளர் இ. தவராசா நன்றி கூறினார். (ப)

## முழுக்க பல்கலைக்கழகத்தை மட்டும் நம்பி இருக்க கூடாது

யாழ்ப்பாணம் மே 9

முழுக்க முழுக்க பல்கலைக்கழகத்தை மட்டும் நம்பியிராது ஆரம்பத்திலேயே தொழில் நுட்பக்கல்வியையும் மாணவர்கள் கற்கத்தொடங்கினால்பாடசாலையை விட்டு வெளியேறும் போது சுய தொழில் ஒன்றை ஆரம்பிக்கக்கூடிய ஆற்றல் அவர்களுக்கு உண்டாகும்.

யாழ் மத்திய கல்லூரியில் முறைசாராக் கல்விப் பிரிவின் குளிர்சாதனப் பயிற்சி நெறியை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய யாழ். கல்வித் திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவு வெளிக்கள உத்தியோகத்தரான திரு. சிதம்பரநாதன் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் வெளிநாடுகளில் எந்த வேலையையும் செய்யத் தயாராக இருக்கும் நம் இளைஞர்கள் நமது நாட்டில் இப்படியான வேலைகளைச் செய்யத் தயங்குகிறார்கள். இந்த நிலை மாறவேண்டும் என்றார்.

இப்பயிற்சி நெறியைக் கற்பிக்கும் ஆசிரியர் திரு. சிறீகந்தராஜா, பேசுகையில் யாழ் கல்வித் திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவு அதிகாரிகளின் முயற்சியினால் பல பயிற்சிநெறிகள் வெற்றியளித்துள்ளன என்றார். (இ-7)

## ஊக்குவிப்பு பணம்

முல்லைத்தீவு மே 9

முல்லைத்தீவு தெற்கு கரைச்சிக் குடியிருப்புக் கிராம சேவையாளர் பிரிவிலுள்ள 85 குடும்பங்களுக்கு அண்மையில் மீளக்குடியமர்வுப்பணமாக 2000 ரூபாவும் உற்பத்தித்திறன் ஊக்குவிப்புப்பணமாக 4000 ரூபாவும் முல்லைத்தீவு இலங்கைவங்கியில் வழங்கப்பட்டன.

1987 ஆம் ஆண்டு நவம்பர் 3 ஆம் திகதி இந்திய அமைதி காக்கும் படையால் வெளியேற்றப்பட்டு மீண்டும் தமது இடங்களில் குடியமர்ந்த குடும்பங்களே இவை என்பது குறிப்பிடத்தக்கது. (ப-92)

ஹஜ் பயண முகவர்கள்

## சேவை மனப்பான்மையுடன் செயற்படுவது அவசியம்

### துணைஅமைச்சர் அஸ்வர்

கொழும்பு மே 9

"ஹஜ் பிரயாணத்தை ஒழுங்கு செய்யும் முகவர்கள் வர்த்தக நோக்கில் மட்டும் ஹஜ் ஏற்பாடுகளைக் கவனிக்காமல் இஸ்லாத்தின் அடிப்படைக் கடமையை நிறைவேற்றச் செல்வோருக்கு சேவை புரியும் நோக்கிலும் செயல்பட வேண்டும்."

முஸ்லிம் சமய கலாசார விவகார துணை அமைச்சர் அல் - ஹாஜ் ஏ. எச் எம். அஸ்வர் இவ்வாறு கூறினார்.

இந்த ஆண்டுக்கான ஹஜ் பயண ஒழுங்குகளைப் பற்றி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட பயண முகவர்களுடன் உரையாற்றிய போதே அவர் இதைக் கூறினார்.

இக் கூட்டம் அமைச்சின் வக்பு சபை அலுவலகத்தில் நடைபெற்றது.

ஜெட்டா விமான நிலையத்தைச் சென்றடைந்ததும் பயணிகள் கண்டபடி தாமதிக்கப்படுவதை நீக்குவதற்காக அவர்கள் 879 சவுதியால் பெறுமதியான ஹஜ் சேவை போக்குவரத்துக் கூடணங்களைக் கொண்டு செல்வதற்கு தாம் பயணிகள் வங்கியுடன் ஒழுங்குகளைச் செய்துள்ளதாக அமைச்சர் இக் கூட்டத்தில் தெரிவித்தார்

ஒவ்வொரு பயணியும் தம்முடன் இத்தொகையை டிரவலர்ஸ் செக் அல்லது வங்கிகளின் விசேட கூப்பன்கள் என்ற வடிவத்தில் எடுத்துச் செல்வதைப் பயண முகவர்கள் உத்தரவாதம் செய்ய வேண்டும் எனவும் அவர் கூறினார். (க-2)

## நெடுந்தீவில் விசேட கூட்டம்

நெடுந்தீவு, மே 9

நெடுந்தீவில் அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்தும் நோக்கிலான விசேட ஆலோசனைக் கூட்டம் ஒன்று எதிர்வரும் 11 ஆம் திகதி நெடுந்தீவு பிரதேச சபை விசேட ஆணையாளர் திரு ஏ. சி. இராசதுரை தலைமையில் நடைபெறும். யாழ் உள்ளூராட்சி உதவி ஆணையாளர்திரு எஸ். டிவகலாலா உட்பட பல முக்கிய அதிகாரிகள் இதில் கலந்து கொள்வர். [ப-111]


## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



கதிரவேலு நன்னித்தம்பி
(ஓய்வு பெற்ற பிஸ்கால் உத்தியோகத்தர்)

பிறப்பு: 14 - 04 - 1914  இறப்பு: 14 - 04 - 1984

திதி: 09 - 05 - 1990

அப்பா நீங்கள் மறைந்து ஆண்டு ஆறு சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் நெஞ்சத்தை விட்டு அகலாது.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

25, மருதடி றோட்,
யாழ்ப்பாணம். [13017]

## நன்றி நவிலல்



16 - 04 - 90 திங்கள் நடைபெற்ற

எமது குமாரர்களான
சர்வேஸ்வர சர்மா (ஆனந்தன்)
கமலேஸ்வர சர்மா (பபா)

ஆகியோரது

★ உபநயன பிரம்மோபதேச ★

வைபவத்தில் கலந்தும் ஆசிச்செய்திகள் அனுப்பியும் சிறப்பித்த யாவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

புன்னாலைக்கட்டுவன்
தி. கெங்காதரக் குருக்கள்
தம்பதிகள்.

(13046)

## உதவித் தாதியர் பயிற்சி நெறி
## Training For Nurses AIDE

19-05-1990 இல் ஆரம்பமாகவுள்ளன.

1. தகைமை வாய்ந்த பதிவுத் தாதியர்களால் (R. N. O.) விரிவுரைகள் நடைபெறுகின்றன.
2. பதினெட்டு மாதகால பாடத்திட்டங்களும் அத்துடன் ஆறு மாதகால செய்முறைப் பயிற்சிகள்.
3. செய்முறைப் பயிற்சிகள் யாவும் யாழ்நகரின் பிரபல்யம் வாய்ந்த வைத்திய சாலையில் நடைபெறுகின்றன.
4. அரச அங்கீகாரம் பெற்ற சர்வதேச தகைமையுடைய சான்றிதழ்.
5. பாடத்திட்டங்கள் யாவும் தமிழ் மொழி மூலம் போதிக்கப்படுகின்றன.
6. இலவச "அக்குபங்சர்" பயிற்சிகள்.

உங்கள் பதிவுகட்கு:-

அதிபர்,
Dr. V. P. சுந்தரராஜன்,
சாயி மெடிக்கல் அக்கடமி
இல. 10, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

[சி-5005]


நகரசபை வவுனியா

## கேள்வி அறிவித்தல்

கீழ் காணப்படும் அட்டவணையில்உள்ள வேலைக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் இணைப்பிரதிகளில் 24. 5. 90ஆந் திகதி பிற்பகல் 2 00 மணி வரை அரசாங்கத்தால் அல்லது உள்ளூராட்சி மன்றங்களில் அல்லது கூட்டுத்தாபனங்களில் ரூபா 36.00000க்கு (முப்பத்தாறு இலட்சம்)அல்லது அதற்கு மேல் கட்டிட ஒப்பந்தகாரராகப் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரரிட மிருந்து என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மீளளிக்கக்கூடிய கேள்விப் பிணைப்பணமும் மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணமும் செலுத்தப்படுவதன் பேரில் 23. 5. 90 ஆந் திகதி நண்பகல் 12 00 மணிவரை கேள்விப்பத்திரங்கள், கேள்வி நிபந்தனைகள், வரைபடப் பிரதிகள் ஆகியவை நேரடியாக விநியோகிக்கப்படும். சித்தி பெற்ற ஒப்பந்தகாரர் ஒப்பந்தப் பத்திரத்தில் கைச்சாத்திட்ட பின்னரும் எம்மால் வழங்கப்பட்ட வரைபடப் பிரதிகள் ஆகியன திரும்பக் கையளிக்கப்பட்ட பின்னரே கேள்விப் பிணைப்பணம் மீளளிக்கப்படும்.

கேள்விகள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு அரக்கு முத்திரையிடப்பட்டு. 'செயலாளர். நகரசபை, வவுனியா' என விலாசமிடப்பட்டு 24-05-90ஆம் திகதி பிற்பகல் 2. 00 மணிக்கு முன் எனக்குக் கிடைக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்படல் வேண்டும். அல்லது வவுனியா நகரசபை அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். கேள்விகள் அனுப்பும் உறையின் இடது பக்க மேல் மூலையில் நவீன சந்தைக் கட்டிட மீளமைப்புக்கான கேள்வி என எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

கேள்விகள் 24-05-90ஆம் திகதி பிற்பகல் 2. 15 மணிக்கு கேள்விச் சபையால் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரர் அல்லது அவரது எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட முகவர் பிரசன்னமாக இருக்க அனுமதிக்கப்படுவர்.

கேள்விக்காரர் கேள்வி விளம்பரம் மற்றும் கேள்விக் கட்டுப்பாடுகளுக்கமைய ஒழுக வேண்டும். கேள்விகளை முழுமையாகவோ அல்லது ஒரு பகுதியையோ ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ நகரசபைச் செயலாளருக்கு உரித்துண்டு

கேள்விக்காரர் தனியார் கம்பனிகளாயின் அவை தமது தற்போதைய பணிப்பாளர்களினதும், பங்குதாரர்களினதும் பெயர்களைக் குறிப்பிட வேண்டும்.

மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

அட்டவணை

| வேலையின் பெயர் | கேள்விப்பத்திரக் கட்டணம் | கேள்விப் பிணைப்பணம் |
|---|---|---|
| நவீன சந்தைக் கட்டிட மீளமைப்புக்கான வேலை-கட்டம் 1,11 | ரூ. 750/- | ரூ. 10, 000/- |

இராஜா தணிகாசலம்,
செயலாளர்,
நகரசபை, வவுனியா.

நகரசபை அலுவலகம்,
வவுனியா,
25- 04- 1990

(சி/4499)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1989 ஆம் வருட ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில், அகில இலங்கை ரீதியில் (தமிழ் மொழி மூலம்) முதலாம் இடத்தைப் பெற்ற கல்முனைக்குடி அல் - பஹ்றியா வித்தியாலய மாணவன் செல்வன் ஏ. ஆர். நிஸாட்றூமிக்கு மேற்படி வித்தியாலயத்தில் நடத்தப்பட்ட விழாவில் பாராட்டுப் பத்திரம் வழங்கப்பட்டது.

பாவலர் ஜனாப் பஸீல் காரியப்பர் பொது மக்கள் சார்பில் செல்வன். நிசாட் றூமிக்குப் பாராட்டுப் பத்திரம் வழங்குவதைப் படத்தில் காண்க.

(படம் :- அம்பாறை மாவட்ட செய்தியாளர்)

(ப-14)

# ஒவ்வொரு கம்பனியிலும் வேலையற்றோருக்கு பயிற்சி

## வர்த்தக அமைச்சர் தீர்மானம்

பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு கம்பனியும் தலா வேலையற்ற இரு இளைஞருக்குப் பயிற்சி அளிக்க வேண்டும் என்று வர்த்தக அமைச்சர் ஏ. ஆர். எம். மன்சூர் தீர்மானித்து இருக்கிறார்.

இதற்காக பதிவு செய்யப்பட்டுள்ள 15 ஆயிரம் நிறுவனங்களின் இயக்குநர்களை நேர்முகமாகச் சந்தித்து ஏற்பாடுகளை மேற்கொள்ளும்படி கம்பனிகள் பதிவாளர் நாயகத்தை அமைச்சர் பணித்திருக்கிறார். (உ-எ)

# எளிமையும் தெளிவும் நூலின் சிறப்பம்சம்

## செய்யுள் நூல் வெளியீட்டில் உரை

யாழ்ப்பாணம் மே 9

''இப்பாடல்கள் எவருக்கும் விளங்கும் வகையில் இனிமை கலந்த எளிய நடையில் அமைந்துள்ளமை முன்னின்று பாராட்டத்தக்க சிறப்பம்சமாகும்.''

இருபாலைக் கவிஞர் அம்பிகைதாசன் எழுதிய சிரணி அந்தாதி என்ற நூல் வெளியீட்டு வைபவத்தில் பண்டிதர் திரு. நா. கணபதிப்பிள்ளை மேற் கண்டவாறு கூறினார்.

திருமதி ந. சிவகுருநாதன் தலைமையில் அரங்கேறிய இந் நூற் செய்யுள்களை பண்டிதை பொன். பாக்கியம் ஆய்வு செய்தார். 101 பாடல்களைக் கொண்ட இந்நூல் ஆசிரிய விருத்தம், கலி விருத்தம் என்ற பாவகையில் பாடப்பட்டுள்ளது. (ப)

# ஓராண்டு நினைவஞ்சலி



**திரு. முத்தையா செல்லையா**

(இலிகிதர் தொழில் திணைக்களம் யாழ்ப்பாணம்)

| தோற்றம்; | மறைவு: |
|---|---|
| 11 - 05 - 1936 | 20 - 04 - 1989 |

அன்பின் திருவுருவாய் பண்பின் பிறப்பிடமாய் எம் அனைவரின் நெஞ்சங்களிலும் நீங்க மற நிறைந்திருக்கும் எம் அன்புத் தெய்வமே அப்பா.

ஆடும் மயிலும் பாடும் குயிலும் அலையும் மலையும் அகல் வானமும் பாடும் செல்லையாவின் பெருமை அவனியில் சாற்றும் அவர் புகழ் வாழ்க.

மனைவி, பிள்ளைகள்,
நண்பர்கள்.

G P. S. றோட்,
கல்வியங்காடு.

[13116]

# ஈழத் தமிழரின் தேசியக் கலை பாரம்பரிய நாட்டுக் கூத்தாகும்

## நாடக நூல் வெளியீட்டு விழாவில் உரை

கொழும்புத்துறை மே 9

'நாட்டுக்கூத்து என்ற பாரம்பரியக் கலையை எமது ஈழத்தமிழன்னையின் மூத்த கலைகளில் ஒன்றாகக் கணிக்கலாம். இக்கலை ஈழத்தமிழரின் தேசியக் கலை ஆகும்,' கவிஞர் தேவதாசனால் எழுதப்பட்ட ''வித்துக்கள்'' என்ற தென்மோடி நாட்டுக் கூத்து நூலின் வெளியீட்டு விழாவில் பேசுகையில் யாழ்ப்பாண பல்கலைக்கழக, தமிழ் துறையைச்சார்த்த கலாநிதி இ. பாலசுந்தரம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விழாவுக்கு அருட்திரு எஸ். ஜெபநேசன் அடிகளார் தலைமைவகித்தார். ஆசியுரையை மேதகு கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை நிகழ்த்தினர்.

கலாநிதி பாலசுந்தரம் மேலும் பேசுகையில், 'கவிஞர் தேவதாசனால் வெளியிடப்பட்ட ''வித்துக்கள்'' என்ற நாட்டுக்கூத்து நாடக வளர்ப்புக்கு தேவையான அம்சங்கள் அனைத்தும் கொண்டதாக விளங்குகிறது.

ஒவ்வொரு அங்கத்துக்கும் தேவையான இராகம், மெட்டு, தாளம், சம்பவம், இடம், என்பவற்றை குறிப்பிட்டபடியால், மேடையேற்றும் நாடகத் தயாரிப்பாளருக்கு சிரமம் இருக்காது'', என்றார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக விரிவுரையாளர், க. நாகேஸ்வரன், திரு. எஸ். எஸ். தங்கராசா ஆகியோரும் ஆய்வுரை நிகழ்த்தினார்கள்.

விழாவுக்கு பிரதம அதிதியாக ''அஸ்ரன்'' இன்ஸ்ரியூட் நிர்வாகப் பொறுப்பாளர். திரு. கே. லோகநாதன் கலந்து கொண்டார் நன்றியுரையை திருமறைக் கலாமன்ற பொதுச் செயலாளர் திரு.எஸ் கொன்ஸ்ரன்ரையின் நிகழ்த்தினார். (க - 30)

## தீவுப்பகுதி ப. நோ. கூ. சங்க பொதுக் கூட்டம்

புங்குடுதீவு மே 9

புங்குடுதீவு - நயினாதீவு ப. நோ. கூ. சங்கங்களின் விசேட பொதுக் கூட்டம் இம்மாதம் 13 ஆம் திகதி புங்குடுதீவு றோமன் க. த. க. பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

சங்கத் தலைவர் திரு. ப. கனகலிங்கம் தலைமையில் கூட்டம் நடைபெறும். (ப-ரி)

# விழிப்புலனிழந்தோரை வீட்டில் வைத்திருக்கும்நிலைமாறவேண்டும்

## நவீல்ட் வைபவத்தில் அதிபர் உரை

சாவகச்சேரி மே 9

விழிப்புலன் இழந்தவர்களை வீட்டிலே வைத்திருக்கும் நிலை மாறவேண்டும். கல்வி வசதி, வேலை வாய்ப்பு அவர்களுக்கும் உண்டு என்பதை உணர்ந்து நாம் செயற்பட வேண்டும். அவர்களைத் தேடி பயிற்சி அளிக்கும் திட்டம் செயலுருப் பெற்றுள்ளது.

விழிப்புலன் அற்றவர்கள் பல்கலைக்கழகம் வரையும் சென்று கல்வி கற்கவும் வசதி செய்து கொடுக்கப்படும்.

நவீல்ட் பாடசாலை அதிபர் திரு. ஜே. எஸ். டேவிட் இப்படிக் கூறினார்.

பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவத்திற்கு அவர் தலைமை வகித்து உரையாற்றினார்.

பாடசாலை முகாமையாளர் திரு. ஏ. சி. கனகராஜா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

திரு. கனகராஜா அங்கு உரையாற்றுகையில் விழிப்புலன் அற்றோர் ஒருவருடப் பயிற்சியை முடித்து பெற்றுச் செல்லும் இச்சான்றிதழ்கள் அவர்களுக்கும் வாழ்வு உண்டு என்ற செய்தியை மக்களுக்குத் தெரிவிக்கிறது. இச்செய்தி கிராமங்களுக்கு எடுத்துச் செல்லப்படவேண்டும் என்றார்.

தையல் பயிற்சி பெற்ற செவிப்புலனற்ற மூன்று பெண்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டதுடன் தையல் மெசின்களும் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

''புதிய வாழ்வு புதிய பாதை'' என்னும் நாடகமும் மேடை ஏற்றப்பட்டது. (இ-31)

## புதியகட்டடம்

வல்வெட்டித்துறை மே 9

இன்பருட்டியில் சிக்கன கடன் வழங்கும் கூட்டிறவுச் சங்கம் புதிதாக நிறுவிய இருமாடிக்கட்டடம் போரூட் நிலைய வடமாராட்சிப் பொறுப்பதிகாரி திரு. எஸ். ஆனந்தராசாவினால் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. (ப-160)


இதோ

உங்கள் நவநாகரீக வீடுகளுக்கு ஏற்ற விதம் விதமான உறுதியான

● பூக்கற்களையும்
(சுவர்களில் காற்றோட்டத்திற்காக பதிக்கும் கற்கள்)

● பூச்சாடிகளையும்
நவீன டிசைன்களில் நியாயமான விலைகளில் தெரிவு செய்யவும்

● குதிரை மார்க் ஓடுகள்
தரத்தின் சிகரமான குதிரை மார்க் தட்டோடுகள், முகட்டோடுகள் மற்றும் சகல மார்க் ஓடுகளையும், செங்கற்களையும் நியாயமான விலைகளில் தெரிவு செய்திட

இன்றே விஜயம் செய்யுங்கள்

புஷ்பா அன்கோ 514, கே. கே. எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

[சி-5006]



பட்டதாரிகளுக்கும் / அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும்
ஓர் அரிய சந்தர்ப்பம்!

இலங்கை நிர்வாக சேவை
(S. L. A. S)

தமிழ்ப்பிரதேசங்களில் உள்ள 150 ற்கும் மேற்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கான

போட்டிப் பரீட்சை

1990 யூன் மாதம் 23 ஆம் திகதி நடைபெறவிருக்கும் இப் பரீட்சைக்கான

விசேட பயிற்சி வகுப்புகள்

ஆரம்பம்: 12- 05- 1990 மு. ப 9 மணி

பாடநெறி: 1. கிரகித்தல் 2. நுண்ணறிவுத்தேர்வு
3. பொது வினாத்தாள்/ விடய ஆய்வு

தகமைகள்:- 30 வயதிற்கு உட்பட்ட பட்டதாரிகளும் / அரசாங்க உத்தியோகத்தர்களும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவுத் திகதி: 18- 05- 1990

★ விரிவுரைகள் சனி. ஞாயிறு தினங்களிலும் விடுமுறைநாட்களிலும்
★ இலவச அச்சடித்த பாடக் குறிப்புகள்
★ கட்டணம் ரூபா 300/- (முழுப்பயிற்சிக்கும்)

விண்ணப்பப் படிவங்களையும் விபரத்திரட்டினையும் எம்மிடம் நேரில்பெற்றுக்கொள்ளலாம்

ASTAN INSTITUTE
[166/1 Hospital Road, Jaffna.]
(A. S சங்கரப்பிள்ளை கட்டிடம் 1ஆம் மாடி)

(சி/4395)



இலங்கை சுங்க அலுவலகம்
யாழ்ப்பாண மாவட்டம்

சுங்க விற்பனை 1/90
பொருட்களுக்கான
கூறுவிலை கோரல்

விற்பனைக்கான கீழ்வரும் பொருட்கள் பட்டியலில் விபரிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு வகைப் பொருட்களுக்கான கிலோ ஒன்றின் அல்லது பொருள் ஒன்றின் விலைக் கேள்விகள் அரக்கு முத்திரையிடப்பட்ட உறைகளில் இடப்பட்டு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் சுங்க விற்பனை 1/90 எனக் குறிப்பிடப்பட்டிருப்பின் 16 - 05 - 1990 அன்று புதன்கிழமை காலை 10.00 மணி வரை யாழ். மாவட்ட சுங்க அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். இங்ஙனம் ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விகள் 18 - 05 - 1990 வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு வருகை தந்துள்ள கேள்வினர் முன்னிலையில் கேள்விகள் உள்ளடக்கிய அரக்கு முத்திரையிடப்பட்ட உறைகள் பிரித்துப் பரிசீலிக்கப்படும். வருகை தரமுடியாத கேள்வினர் எழுத்து மூலம் தமது பிரதிநிதிகளை நியமிப்பின் எனது அனுமதியுடன் அவர்கள் அலுவலகத்தில் சமூகமளிக்க சந்தர்ப்பம் அளிக்கப்படும். அதி உயர்ந்த விலைக்கான கேள்வி ஏற்றுக் கொள்ளும்மிடத்து கேள்விக்குரியவர் முழுப்பொருட்களுக்கான மொத்த விலைத்தொகையை வங்கி உத்தரவாத வோலை (Bank Draft) மூலம் மூன்று நாட்களுக்குள் செலுத்த வேண்டும். இதன்பின் தீர்மானிக்கப்பட்ட திகதியில் விற்பனைக்கான பொருள்கள் யாவும் காங்கேசன்துறை இறங்குதுறையிலிருந்து விநியோகிக்கப்படும். மேற்கூறிய நிபந்தனைகள் தவிர்ந்த மற்றைய நிபந்தனைகளுக்கு இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு வர்த்தமானி இலக்கம் 291 (1984 - 03 - 30) இல் சுங்கப் பணிப்பாளர் நாயகம் அவர்களால் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலுக்கு கவனம் கோரப்படுகின்றது:

| | பொருள் விபரம் | தொகை |
|---|---|---|
| 1. | கராம்பு (Cloves) | 1746.5 கிலோ |
| 2. | பழைய செம்புப் பொருட்கள் (Copper) | 496 '' |
| 3. | சாதிக்காய் பூ (Nutmeg Flower) | 106 '' |


குறிப்பு: இவை பற்றிய மேலதிக விபரங்களை யாழ். மாவட்ட சுங்க அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

சுங்க அத்தியட்சகர்.
யாழ். மாவட்ட சுங்கப் பணிப்பாளருக்காக.

N/PREV/SALE/90
சுங்க அலுவலகம்
601/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
1990. 05. 07

[சி-4503]


# ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்

**விஸ்வலிங்கம் நவரெட்ணசிங்கம்**

(நவம்)

| அன்னை மடியில்: | இறைவன் அடியில்: |
|---|---|
| 17 - 07 - 1948 | 20 - 04 - 1989 |

திதி: 09 - 05 - 1990

கண்ணகி அம்பாள் திருவருளே! எங்கள் அன்புச் செல்வமே, ஆண்டு ஒன்றாயினும் ஆறாத்துயரில் நின்று மூழ்குகின்றோம். மீண்டும் எங்களிடத்தில் திருவிளக்காய் மகிழ்ச்சியுடன் இனிதுடன் வாழ வருவீராக. இறைவனடிப் பாதத்தில் இறைஞ்சுகிறோம்.

சாந்தி! சாந்தி!!

பிரிவால் துயருறும்
தாய், மனைவி, பிள்ளைகள்
சகோதரங்கள், மைத்துனர்கள், சித்தப்பா.

11 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு கிழக்கு,
புங்குடுதீவு.

(3527)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தை விலைகள்

சுன்னாகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் சந்தைகளில் நேற்றைய மரக்கறி விலைகள் — கிலோ அடிப்படையில்;

| | சுன்னாகம்: | திருநெல்வேலி: | யாழ்ப்பாணம்: |
|---|---|---|---|
| கத்தரி | ரூ. 18 00-20.00 | ரூ. 20.00-23.00 | ரூ. 22.00-24.00 |
| வாழைக்காய் | ரூ. 7.00-10 00 | ரூ. 4.00- 6.00 | ரூ. 8.00-10.00 |
| பயிற்றங்காய் | ரூ. 18 00-20.00 | ரூ. 20.00-24.00 | ரூ. 22.00-24.00 |
| பாகற்காய் | ரூ. 15.00-18 00 | ரூ. 22.00-24.00 | ரூ. 22.00-24.00 |
| கோவா | ரூ. 11.00-12.00 | ரூ. 11.00-13 00 | ரூ. 16.00-18.00 |
| லீக்ஸ் | ரூ. 20.00-22 00 | ரூ. 20.00-23.00 | ரூ. 22.00-24.00 |
| கரட் (மலைநாடு) | ரூ. 18.00-20.00 | ரூ. 20.00-22.00 | ரூ. 22.00-24.00 |
| பீற்றூட் | ரூ. 6 00- 8.00 | ரூ. 7.00- 9.00 | ரூ. 14.00-16.00 |
| பீன்ஸ் | ரூ. — | ரூ. 20.00-22.00 | ரூ. 20.00-22.00 |
| பூசணி | ரூ. 5 00- 6 00 | ரூ. 3.00- 4.50 | ரூ. 6.00- 7.00 |
| பச்சைமிளகாய் | ரூ. 18.00-20.00 | ரூ. 11.00-13.00 | ரூ. 20.00-22.00 |
| வெங் (வேதாளம்) | ரூ. 32.00-38.00 | ரூ. 34.00-36.00 | ரூ. 40.00-42 00 |
| வெங்காயம் (சிறிய) | ரூ. 26.00-32 00 | ரூ. 18.00-25.00 | ரூ. 34.00-36 00 |
| உருளைக்கிழங்கு | ரூ. 27.00-29.00 | ரூ. 29.00-31.00 | ரூ. 28.00-32 00 |
| மரவள்ளிக்கிழங்கு | ரூ. 8.00- 9.00 | ரூ. 6 00- 7.00 | ரூ. 9.00-10.00 |
| வெண்டைக்காய் | ரூ. 14.00-15.00 | ரூ. 15.00-19 00 | ரூ. 18.00-20.00 |

# திருநெறிய தெய்வீக மாநாடு இறுதி நாள் நிகழ்ச்சி இன்று

யாழ்ப்பாணம், மே 9

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற்று வரும் திருநெறிய தெய்வீக மாநாட்டின் இறுதிநாள் இன்றாகும்.

இம்மாநாடு சடந்த 29 ஆம் திகதி ஆரம்பமாகியது 9 ஆவது நாளான இன்று, மாநாட்டுக்கு யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணன் தலைமை வகிப்பார்.

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் திரு. சோ. பத்மநாதன் விரிவுரை நிகழ்த்துவார். இயல், இசை, நாடகப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு முரசொலி அதிபர் திரு. ம. சிவராசா பரிசில்கள் வழங்குவார். சங்கீத பூஷணம் கே. ஆர். நடராசா பண்ணிசை நிகழ்த்துவார். (இ-7)

## ஈழத் தமிழ்----

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் சொன்னதாவது:-

இலங்கையில் உள்ள இந்திய வம்சாவளியினரை ஏற்றுக்கொள்ள மாநிலம் தயாராக இல்லை.

ஈழத் தமிழ் அகதிகள் இலங்கைக்குத் திரும்பிய பின்னர் தான், இந்திய வம்சாவளியினரைத் தமிழ் நாடு அரசு ஏற்றுக்கொள்ளும்.

சுமார் 1 லட்சத்து 72 ஆயிரம் மலையகத் தமிழர்கள் இந்தியாவில் குடியேற வேண்டுமென இலங்கை அரசு கணக்குக் காட்டுகிறது. பாரதத்தில் ஒரு லட்சத்துக்கு அதிகமான ஈழத் தமிழ் அகதிகள் இருக்கிறார்கள்.

**முகாம் எதுவும் இல்லை**

தமிழகத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயகக முகாம் ஒன்றும் இல்லை. அப்படி இருக்க அனுமதிக்கவும் முடியாது.

சட்டப்பேரவை உறுப்பினர்கள் முகாம்கள் இருப்பதாக சந்தேகம் கொண்டுள்ள இடங்களை தெரிவித்தால் அங்கே நாம் அவர்களை அழைத்துக் கொண்டு சென்று உண்மையை அறியலாம்.

எந்த அரசியற் கட்சிக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழகத்தில் பயிற்சி கொடுக்கவில்லை. இது சம்பந்தமாக வந்த செய்திகள் அனைத்தும் உண்மைக்கலப்பில்லாத பொய்யாகும்.

தமிழக கடற்பகுதியை நேரடியாகச் சென்று பார்வையிட பத்திரிகையாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் எனது தலைமையில் வரத் தயாராக இருக்கிறார்களா?

**மோதவைக்கும் சக்தி**

மத்திய அரசையும் மாநில அரசையும் மோத வைக்க வேண்டும் என்று எண்ணுபவர்கள் பொய்ப்பிரசாரத்தில் ஈடுபடுகின்றனர்.

எந்தத் தீவிரவாதத்தையும் தமிழகத்தில் அனுமதிக்கமாட்டோம்.

மத்திய மாநில மோதலை உண்டாக்க முயற்சிக்கும் அமைப்பின் மீது இந்தியப் பிரதமர் நடவடிக்கை எடுக்க வேண்டும்— என்றார் முதல்வர் கருணாநிதி. [அ-எ-9]

## சாரதி-

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அறிவித்ததை அடுத்து யாழ். பொலீஸ் பிரிவு ஒருவரைத் தெரிவு செய்து கொழும்புக்கு அனுப்பி மாதங்கள் மூன்றாகிவிட்டன.

எனினும் கொழும்பு அதிகாரிகள், இவரை இதுவரை பயிற்சிக்கு அழைக்கவில்லை. (ஓ-3)

## அடுத்த-

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஹ்ரமீத்துக்கும் இடையில் அடுத்த கட்ட சந்திப்பு யாழ்ப்பாணத்தில் நடைபெறும் என்பதை புலிகளின் உயர்மட்ட பிரமுகர் ஒருவரும் நேற்று ஊர்ஜிதம் செய்தார். [உ]

## மின்சார வீதி ஞானவைரவர் கோவிலில்

யாழ்ப்பாணம் மே 9

யாழ். மின்சாரநிலைய வீதி மூன்றாம் ஒழுங்கையில் அமைந்திருக்கும் ஞானவைரவர் கோயிலில்இன்றுபுதன்கிழமை சித்திராப் பௌர்ணமி தினத்தன்று பல்வேறு சமய நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

காலை 8. 30க்கு விசேச அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து சித்திரை சஞ்சி வழங்கலும் இடம் பெறும்.

மாலை 5. 00மணிக்குஞான வைரவர் வீதிவலம் வருவதும் சமய சொற்பொழிவும் அதனைத் தொடர்ந்து வில்லிசை நிகழ்ச்சியும் இடம் பெறும். [இ]

## அபுயூசூப் பயணமானார்

கொழும்பு மே 9

வடக்கு - கிழக்கு மாகாண சபை அமைச்சர் ஜனாப் அபுயூசூப் நேற்று முன் தினம் புதுடில்லி சென்றார்.

புதுடில்லியில் தற்போது தங்கியிருக்கும் ஈ.பி.ஆர்.எல். எவ் செயலாளர் நாயகம் திரு. கே. பத்மநாபாவைச் சந்தித்து பேச்சு நடத்துவதே இப்பயணத்தின் நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டது. [உ-எ]

## மலையக மக்களை- - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்கும் இனப்படுகொலைகளுக்கும் மத்தியில் இந்த நாட்டை வளமாக்கிய மக்கள் அவர்கள்.

அவர்கள் தாமாக விரும்பி இந்தியா செல்லவில்லை. இந்தியா செல்ல கட்டாயப்படுத்தப்பட்டார்கள்.

இவர்களைத் திருப்பி அனுப்ப செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் எல்லாம் இந்த மக்களை கலந்தாலோசிக்காமலேயே செய்யப்பட்டன.

ராஜீவ் - ஜே. ஆர் ஒப்பந்தம் செயல் இழந்து செத்துவிட்டது போலவே இந்த பழைய ஒப்பந்தங்களும் செல்லுபடியாகாதவை.

இந்த ஒப்பந்தங்களின் அடிப்படையில் இந்த மக்களின் ஒரு பகுதியினரை இந்தியா செல்லுமாறு கட்டாயப்படுத்துவதை எமது கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## லக்ஷ்மி விக்கிரகம் இன்று பிரதிஷ்டை

யாழ்ப்பாணம், மே 9

அத்தியடி விநாயகர் ஆலயத்தில் இன்று காலை 7மணிக்கு லஷ்மி விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட இருக்கிறது.

சிவ ஸ்ரீ ஸ்கந்தசாம்பசிவக் குருக்கள் பிரதிஷ்டா கும்பாபிஷேகத்தை நடத்தி வைப்பார். (ஓ-3)

## இரத்த தானம்

யாழ்ப்பாணம், மே 9

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க தினத்தை முன்னிட்டு நேற்று செவ்வாய்க்கிழமை இரத்த தான வைபவத்தில் யாழ். இந்துக்கல்லூரியைச் சேர்ந்த சுமார் 30 மாணவர்கள் இரத்தம் வழங்கினார்கள். (ஓ-7)

## சித்திரா பௌர்ணமியும் வெசாக்கும்

இன்று சித்திரா பௌர்ணமி தினமாகும். ஆலயங்கள் பலவற்றிலும் தீர்த்தத் திருவிழாவும் பொங்கல் விழாவும் நடக்கும். பல ஆலயங்களில் சித்திர புத்திரர் புராண படனம் இடம்பெற்று கஞ்சி வார்க்கப்படும்.

இன்று வெசாக் தினமாகும். அதனை ஒட்டி இன்றும் நாளையும் அரசாங்க வர்த்தக விடுமுறை நாட்கள். (அ)

## புலிகள் ...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

திருந்தோம்.

அவர்களுக்கு பாதுகாப்பு உத்தியோகஸ்தர்களையும் வழங்கியிருந்தோம். ஆனால் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்களை அவர்கள் சரிவரப்பயன்படுத்துவதில்லை. சம்பவ தினம்கூட திரு. சாம் தம்பிமுத்து பாதுகாப்பு ஊழியர் இல்லாமலேயே சென்றுள்ளார்- என்றார் திரு. ரஞ்சன். [ஓ-3]

# பொலீஸ் விசேட பயிற்சி: 6 பாடசாலைகள் மூடப்பட்டன

யாழ்ப்பாணம், மே 9

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் வன்செயல்களைக் கட்டுப்படுத்தவென பொலீஸ் பகுதியினரால் உருவாக்கப்பட்ட 'பிளட்டூன்' குழுவுக்குப் பயிற்சி அளித்த ஆறு விசேட பாடசாலைகளும் மூடப்பட்டுவிட்டன.

பொலீஸாருக்கான பயிற்சி மட்டுமன்றி அவர்களுக்கு விசேட இராணுவப் பயிற்சிகளும் இந்தப் பாடசாலைகளில் வழங்கப்பட்டு வந்தன.

இந்தப் பயிற்சிப் பாடசாலைகளில் உள்ள தளபாடங்கள், மற்றும் பயிற்சி அளிக்கும் சாதனங்கள் அனைத்தும் தமிழ்ப்பகுதியில் உருவாக இருக்கும் பொலீஸ் பயிற்சிப் பாடசாலைக்கு வழங்கப்பட இருப்பதாக அறிய வருகிறது. [ஓ-3]

# ★ இலங்கைக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி ரூ. 600 கோடி நிதி உதவி

கொழும்பு, மே. 9

இலங்கைக்கு 15 கோடி டொலர் (600 கோடி ரூபா) உதவி ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து கிடைக்கும் சாத்தியக்கூறு புதுடில்லிப் பேச்சுக்களின் போது உருவாகி இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

புதுடில்லியில் இம்மாத ஆரம்பத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் 23 ஆவது ஆண்டு ஆளுநர்சபைக் கூட்டத்தில் இது சம்பந்தமான பேச்சுக்கள் இடம்பெற்றதாக நிதி அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கைக்கு 5 கோடி 170 லட்சம் டாலர் வழங்கியது தெரிந்ததே. [உ-எ]

# எம். பிக்களுக்கு பாதுகாப்பு வழங்க புதிய திட்டம்

கொழும்பு, மே 9

சகல நாடாளுமன்ற உறுப்பினர்ளுக்கும் பாதுகாப்பு வழங்க அரசாங்கம் புதிய திட்டம் ஒன்றைதயாரித்துள்ளது. அந்தத்திட்டம்நேற்று மாலை சபாநாயகருக்கு அறிவிக்கப்பட்டது.

மேற்கண்டதகவலை நேற்று அமைச்சரவை முடிவுகளை அறிவிப்பதற்காகக் கூட்டப்பட்ட பத்திரிகையாளர் மாநாட்டில் வைத்து அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின தெரிவித்தார்.

இதே வேளை தமிழ் எம் பிக்களுக்கு பாதுகாப்பு பலப்படுத்தப்படும் என்றும் அமைச்சர் ரஞ்சன் அறிவித்தார். [உ-3]

# மக்கள் கட்சியின் தலைமை: சந்திரிகாவின் இடத்துக்கு டட்லி குணவர்த்தனா!

கொழும்பு, மே 9

இலங்கை மக்கள் கட்சியின் பதில் தலைவராக திரு டட்லி குணவர்த்தனா தெரிவு செய்யப்பட்டார்.

தலைவராகப் பதவிவகித்த திருமதி சந்திரிகா குமாரணதுங்காவை கட்சியின் செயற்குழு அண்மையில் கட்சியை விட்டு வெளியேற்றியது தெரிந்ததே.

கட்சியின் மாநாடு எதிர் வரும் ஜூலை மாதம் நடைபெறும். அப்போது கட்சியின் சகல பதவிகளுக்கும் தேர்தல் மூலம் உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்படுவர்.

இத்தகவலை கட்சிப் பொதுச் செயலாளர் வை. பி. டி. சில்வா தெரிவித்தார். [உ-எ]

# பாக். எல்லைப் புறத்தில் இந்தியமேஜர் சுட்டுக்கொலை

புதுடில்லி, மே 9

ஜம்மு - காஷ்மீர் பகுதியில் பூஞ்ச் என்ற இடத்தில் இந்திய இராணுவத்தைச் சேர்ந்த மேஜர் அசோக்குமார் நேற்று சுட்டுக் கொல்லப்பட்டார்.

பாகிஸ்தான் எல்லைப் புறத்தில் காவல்பணியில் ஈடுபட்டிருந்த போது தீவிரவாதிகள் நடத்திய தாக்குலில் இவர் உயிரிழந்தார் என்று ஏஜன்ஸிச் செய்திகள் தெரிவித்தன. [ஓ-எ]

# நியமனங்களில் எம். பிக்கள் தலையிட்டால் நடவடிக்கை!

## விரைவில் சட்டமூலம் நிறைவேறும்

கொழும்பு, மே 9

அரச நியமனங்கள், பதவி உயர்வுகளுக்கு எவரது பெயரையும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிபார்சு செய்ய முடியாது. அப்படி இவ்விடயங்களில் தலையிடும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடுத்த தேர்தலில் நிற்கத் தகுதியற்றவர்களாவர். இது சம்பந்தமாக சட்ட மூலம் விரைவில் நாடாளுமன்றத்துக்கு வரும்'.

-இப்படிக் கூறுனார் கல்வி, உயர்கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி.

நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் நியமனம், பதவி உயர்வு, சம்பந்தமான முடிவுகளை பத்திரிகையாளர்களுக்கு வெளியிடுகையிலேயே அவர் இப்படித் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசுத்துறையில் சகல ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுகளும் திறமை அடிப்படையிலும் இனவிகிதாசாரத்துக்கும் அமையவே இனி இடம் பெறும்.

மாவட்ட நியமனங்கள் அந்தந்த மாவட்டத்தில் உள்ள இன விகிதாசாரத்துக்கு அமையவே வழங்கப்படும்.

மாகாண மட்டத்தில் அந்த மாகாணத்தில் உள்ள இன விகிதாசாரப்படி நியமனங்கள் வழங்கப்படும்.

நாடு முழுவதையும் உள்ளடங்கியதான நியமனங்களில் தேசிய இன விகிதாசாரம் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

சகல சிறிய இனக் குழுக்கள் உட்பட சிங்கள மக்களின் இனவிகிதாசாரம் 75 சதவிதமாகும்.

இலங்கைத் தமிழர் 12.7 சதவீதம், முஸ்லிம்கள் 8 சதவீதம், இந்தியத் தமிழர் 5.5 சதவீதம்.

நியமனங்கள் தொடர்பாக கடந்த 35 வருடங்களாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்த முறைகள் கைவிடப்பட வேண்டும்.

முன்னர் திறமை அடிப்படையிலேயே நியமனங்கள் செய்யப்பட்டு வந்தன.

கிராமப்புற மாணவர் ஒருவர் கொழும்பு றோயல் கல்லூரியில் அனுமதி பெற எவ்வித தடையும் இல்லை.

ஐந்தாம் வகுப்பிற்கான புலமைப்பரிசில் எண்ணிக்கை 5 ஆயிரத்தில் இருந்து 25 ஆயிரமாக அதிகரிக்கப்படும். அதை 50 ஆயிரமாக அதிகரிக்கும் எண்ணமும் எனக்கு உண்டு.

-இப்படி அமைச்சர் லலித் அத்துலத் முதலி சொன்னார். (உ-எ)

## உல்லாச ஹோட்டலுக்கு பாதுகாப்பு?

கொழும்பு, மே 6

நாட்டில் உள்ள உல்லாசப் பயண ஹோட்டல்களுக்கு பாதுகாப்பளிக்கும் திட்டம் ஒன்றைக் கொண்டு வர அரசு தீர்மானித்துள்ளது.

இதேவேளை, சிகிரியா உல்லாசப்பிரயாண ஹோட்டல் கொள்ளைச் சம்பவம் தொடர்பாக பாதுகாப்புப் படையினர் மூவரை கைது செய்தனர். குறைந்தது 30 பேரை விசாரணைக்காக அழைத்துச் சென்றனர் என்று பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. [-எ]

# காரில் இருந்து இறங்க - - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வசிக்கின்றேன்.

சம்பவதினம் காலை 9. 30 மணிக்கு காரில் நாடாளுமன்றம் சென்றோம். நானும் அவரும் மட்டுமே அங்கு சென்றோம். பின்னர் கோட்டை அலுவலகத்துக்குச் சென்று விட்டு திரும்பவும் சிராவஸ்திக்கு வந்தோம். அங்கு அவரது மனைவியும், மனைவியின் தாயாரும், அவரது பிள்ளையும் இருந்தனர். என்னை உணவருந்தும்படிகேட்டனர்.

அச்சமயம் இறந்தவரின் மனைவியான திருமதி கலா தம்பிமுத்து கனடா தூதரகத்துக்கு செல்லவேண்டும் என்று இறந்தவரிடம் சொன்னார்.

பிற்பகல் 1. 15 மணியளவில் நானும் இறந்தவரும், அவரது மனைவியும் காரில் புறப்பட்டோம். பின் ஆசனத்தில் அவர்கள் இருந்தார்கள் எனக்குநேரே பின்னால் அவர் மனைவி அமர்ந்து இருந்தார்.

**தூதரகத்தின் முன்னால்..**

தூதரகத்துக்கு முன்னால் கார் போனபோது இறந்தவர் காரை வெளியே நிறுத்தும்படி கூறிவிட்டுத் தாங்கள் உள்ளே போய் வருவதாகச் சொன்னார். அவரது மனைவியார் காரை உள்ளே விடும்படி கூறினார். இறந்தவர் வேண்டாம் நான் போய் வருகிறேன் என்று கூறி கதவைத் திறந்தார். அச்சமயம் ''படபட'' என்று சத்தம் கேட்டது.

காரின் கண்ணாடிகள்உடைந்து சிதறின. நான் பின்னால் பார்த்தபோது ஒருவர் பிஸ்டலைக் கையில் வைத்துக் கொண்டு நின்றார். திரு. சாம் தம்பிமுத்து ஆசனத்தில் இரத்தம் தோய்ந்த நிலையில் சரிந்து கிடந்தார். அவரது மனைவி 'ஐயோ. ஐயோ' என்று கத்திக் குளறினார். பிஸ்ரலுடன் வேறு ஒருவரும் அங்கு நின்றார். அவர் வெள்ளைஉடையுடன் காணப்பட்டார்.

எனக்கு அருகில் மீண்டும் துப்பாக்கிச் சத்தம் கேட்டது. நான் காரின் கதவைத்திறந்து தூதரகத்துக்குள் ஓடினேன். பொலீஸை வரவழைக்குமாறு பாதுகாப்பு அதிகாரிகளிடம் கேட்டேன்.

மீண்டும் சொற்பநேரத்தில் காரின் அருகே வந்தபோது திருமதி தம்பிமுத்து அலறிக்கொண்டிருந்தார். ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகும்படி கேட்டார். பொலீஸார் வந்தனர், அதன்பின்னர் திரு. தம்பிமுத்து இறந்துவிட்டது தெரியவந்தது.

சம்பவம் நடைபெற்றசமயம் நான் பயத்துடன் இருந்ததால் சுட்டவர்களை அடையாளங்காட்ட முடியாது — என்று சாரதி விஜயரத்னா தெரிவித்தார்.

**கார்நின்ற இடத்துக்கு வந்தார்**

கனேடிய தூதரக சாரதி யோசேப் அந்தனி மத்தியூ சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

சிவப்புநிற வி. என். டபிள்யு ரகக்கார் தூதரகத்துக்கு முன்னால் வந்து நின்றது, சென்: பிரிட்ஜெட் கல்லூரிப் பக்கமாக இந்து ஒருவர் சாதாரணமாக நடந்து கார் நின்ற இடத்துக்கு வருவதைக் கண்டேன், காருக்குச் சமீபமாக வேகமாகச்சென்று கதவைத்திறந்து சுட்ட சத்தம் கேட்டது. மற்றும் ஒருவர் அடுத்தபக்கத்தில்இருந்து சுட்டார்.

அங்கிருந்து சாரதி ஓடுவதை நான் காணவில்லை. சுட்டவர்கள் நடந்துசென்று நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளில் ஏறித் தப்பினர். மோட்டார் சைக்கிளில் ஒருவர் அமர்ந்திருந்தார். புறப்படும் போது மூவர் மோட்டார் சைக்கிளில் போவதைக் கண்டேன் அத்தக் கறுப்பு நிற மோட்டார் சைக்கிளின் இலக்கத்தை நான்குறித்துக்கொண்டேன். சுட்டவருக்கு சுமார் 30 வயது இருக்கும் என மதிப்பிடலாம்- என்றார் அந்தனி மத்தியு.

பிரேத பரிசோதனை நடத்திய சட்டவைத்திய அதிகாரி எம். எஸ். எல். சல்காது சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

இறந்தவரின் கழுத்தில் ஒரு சன்னமும், நெஞ்சில் இரண்டு சன்னங்களும் இருந்தன. இருதயம் கழுத்துப்பகுதியில் ஏற்பட்ட காயங்களின் காரணமாகவே அவர் இறந்துள்ளார்- என்று கூறினார்-

திரு. தம்பிமுத்துவின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்க உத்தரவிட்ட நீதிபதி விசாரணையை ஒத்திவைத்தார். [ஓ-2-3]


HAYLEYS PHOTOPRINT (Private) LTD

இனாம்! இனாம்! இனாம்!

இதோ வந்து விட்டது! AGFA COLOUR x R. G 100

காலா காலமாக நினைவில் நிற்கும் நிகழ்ச்சிகளை அழகிய வண்ணப் படமாக்குவதற்கு புத்தம் புதிய வடிவில் அழகிய வர்ணப்படச்சுருளை உள்ளடக்கிய Agfa Colour x R. G. 100 இப்பொழுது விற்பனையாகிக் கொண்டிருக்கிறது. Agfa Colour x R. G. 100 வாங்கும் ஒவ்வொருவருக்கும் இலவசமாக ஒரு அல்பம் கிடைக்கும்! Agfa Colour x R. G. 100 என்று கேட்டு வாங்கிப் பாவியுங்கள்!

வடமாகாண விநியோகஸ்தர்கள்:

CHRIS MARKETING ORGANISATION
No. 380, Hospital Road,
JAFFNA.

● படச்சுருள்களை ஐந்தே நாட்களில் கழுவிப் பெற்றுக்கொள்ளலாம்.
● கீழ்க்கண்ட முகவரிகளிலும் இவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

யாழ்ப்பாணம்

★ சித்திராலயா ஸ்ருடியோ, இல. 18, ஸ்ரான்லி வீதி.
★ ஞானம்ஸ் ஸ்ருடியோ, மணிக்கூட்டு வீதி.
★ மரியநாயகம், கஸ்தூரியார் வீதி.

சுன்னாகம்

★ பிறின்ஸ் ஸ்ருடியோ, கே. கே. எஸ். வீதி.
★ துர்க்கா ஸ்ரேஷனேர்ஸ் பஸ்நிலையம் முன்பாக.
★ சுந்தரம் அன் சன்ஸ் கே. கே. எஸ். வீதி.

[சி-5007]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மிடம் வர்ண நிழற்பட பிரதிகள்,
பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
பட அல்பங்கள், படச்சுருள்கள்
இலவசமாக வழங்கப்படும்

மேலதிக விபரங்களுக்கு:
**ஆர்த்தி ஜுவல்லர்ஸ்**
111, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.,

# உதயன்

09 - 05 - 1990 புதன்கிழமை

அன்புடன் அழைக்கின்றது
**ஆர்த்தி ஜுவல்லர்ஸ்**
- தரமான வர்ண நிழற்படபிரதி ஒன்று 3R/PC - 6/30, 5/90, 5/50
- விநியோகம் ஒரு வாரம் [7 Days]
- விற்பனை - வர்ண நிழற்படச் சுருள்கள்

பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

## மரண அறிவித்தல்கள்

### விக்டோறியா ஜெயமணி

விக்டோறியா ஜெயமணி 05-05-90 இல் காலமாகி விட்டார் இவர் வேலாயுதபிள்ளையின் (இளைப்பாறிய மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்) அன்பு மனைவியும், காலம்சென்ற அரசரெட்டினம், அந்தோனிப்பிள்ளை (ஆசிரியர்) பொன்றோஸ், காலம்சென்ற பொன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ராசம்மா, கனகம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும், நிர்மலா, ஜெகநாதன், U.K., பத்மநாதன் U.K., ஆசிர்நாதன் U.K., நாதன் (கனடா), சறோஜினி, கமலநாதன் (கனடா), சுபோதினி (கனடா), விஜயநாதன் (U.K.), ஆகியோரின் அன்புத் தாயாரும், காலம்சென்ற முத்துக்குமார், சிறி, விசி, விண்டா, மாலினி, ரெட்ணகுமார் (டோகா), சுரேஸ் (சவூதி) ஆகியோரின் அன்பு மாமியாரும், நிரோஷ்குமார், தர்ஷன், பியோனா, டீன், றோகான், நிஷாந்தி, கிருஷாந்தி, ஷோண், டறன், டிலான், றஜீல், Brownson ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியை 10-05-90 கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் மாலை 3 30 மணிக்கு நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
**வேலாயுதபிள்ளை**

15, சந்தானமாதா கோவில் வீதி,
பாண்டியன்தாழ்வு.
யாழ்ப்பாணம்.
(13050)

### சுப்பிரமணியம் பார்பதிப்பிள்ளை

நெடுந்திவைச் சேர்ந்த சுப்பிரமணியம் - பார்பதிப்பிள்ளை காலமானார். இவர் காலஞ்சென்ற மருந்தகப் பொறுப்பாளர் சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், கந்தையா (யோகபுரம்), பாலசிங்கம் (விவசாயப் போதனாசிரியர், பாண்டியன்குளம்), கோபாலசிங்கம் (களஞ்சியப் பொறுப்பாளர், விவசாயத் திணைக்களம், முருங்கன்), கற்பகம், நாகம்மா, கமலம், தில்லாத்தைப்பிள்ளை, சிந்தாமணி ஆகியோரின் அன்புத் தாயாரும், முத்துக்குமாரு, முருகேசு, மு. கணபதிப்பிள்ளை, ஆ: கணபதிப்பிள்ளை, சுப்பிரமணியம் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 9-5-90 பி. ப 5 00 மணியளவில் நெடுந்தீவில் நடைபெறும்.

தகவல்;
**வ. சு. பாலசிங்கம்.**

மாவிலித்துறை,
நெடுந்திவு.
(3530)

### திருமதி தம்பாபிள்ளை இராசம்மா
#### 1ம் வட்டாரம் புங்குடுதீவு

புங்குடுதீவு 1ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி தம்பாபிள்ளை இராசம்மா (7--05-1990)இல் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற கதிரவேலு தம்பாபிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பசுபதிப்பிள்ளை சின்னத்தங்கம் ஆகியோரின் அன்பு மகளாரும், மகேஸ்வரி, பரமேஸ்வரி, கனகம்மா, தவமணி, பாலசுப்பிரமணியம், மோகனராணி, கனகலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும் V. M. தம்பிஐயா, காலஞ்சென்ற வைரவிலிங்கம், கனகலிங்கம், பொன்னுத்துரை, மஞ்சுளகுமாரி, சண்முகநாதன், காயாநிதி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற விசுவலிங்கம், பொன்னம்பலம், அன்னம்மா, காலஞ்சென்ற நல்லபிள்ளை, தங்கராசா ஆகியோரின் சகோதரியுமாவார். இறுதிக்கிரியைகள் (09-5-1990) புதன்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரது 4ஆம் வட்டாரத்திலுள்ள மகளாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சேரதீவு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்;
**த. பாலசுப்பிரமணியம்**
[13051]

### திருமதி வேலுப்பிள்ளை சுந்தரம்
(குரும்பசிட்டி)

குரும்பசிட்டியைச் சேர்ந்த, தற்பொழுது சாவகச்சேரியில் வசிக்கும் திருமதி வேலுப்பிள்ளை சுந்தரம் 8. 5 90 இல் காலமானார். அன்னார் மு. க. வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும். மகேந்திரன் [செந்தில் அச்சகம், சாவகச்சேரி], மனோன்மணி [விவசாயப் போதனாசிரியை], தவமணி [ஆசிரியை நம்புக்கணை], பராசக்தி [தாதி- தரம் 1 கொழும்பு ஆஸ்பத்திரி], மகாதேவன் [சட்டத்தரணி, குரும்பசிட்டி] சிவசக்தி, கிளி (சுவிஸ்), பரமேஸ்வரி [மிருகவைத்திய சுந்தோர், சாவகச்சேரி], மனோகரன் [சுவிஸ்], மகேஸ்வரன் [உரிமையாளர் K. V M. றெங்கோடிங் ஸ்ருடியோ, சாவகச்சேரி] ஆகியோரின் அன்புத்தாயாரும், கனகாம்பிகை, ரெறன்ஸ் (பாதுகாப்பு மேற்பார்வையாளர், கொழும்பு), பவானி (ஆசிரியை குரும்பசிட்டி], பத்மநாதன் K. V. M. றெக்கோடிங் ஸ்ருடியோ முகாமையாளர்), வசந்தகுமார் (சுவிஸ்], செகராசா [லிகிதர், ஆற்றுப்பள்ளத் தாக்கு அபிவிருத்திச் சபை கொழும்பு], வதனி [சுவிஸ்], தவராணி ஆகியோரின் மாமியாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 10 - 5 - 90 வியாழக்கிழமை மு. ப. 11 மணிக்கு அன்னாரின் சாவகச்சேரி இல்லத்தில் இருந்து தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**மு. க. வேலுப்பிள்ளை.**

2 ஆவது சுற்குழி ஒழுங்கை,
தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.
[13124]



நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற்று வரும் திருநெறிய தெய்வீக மாநாட்டின் ஆரம்பநாள் விழாவில் எடுக்கப்பட்ட படங்கள். முதலாவது படத்தில் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் அ துரைராஜா தலைமை வகித்து உரையாற்றுகிறார். அருகில் நல்லை ஆதீனகர்த்தா ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் காணப்படுகிறார். இரண்டாவது படத்தில் ஷப்றா நிதி நிறுவனத்தின் ஆதரவில் நடைபெற்ற தேவார மனனப் போட்டியில் கலந்து கொண்ட மாணவிக்கு திருமதி. யசோதை சரவணபவன் பரிசில் வழங்குவதைக் காணலாம். தேவார மனனப் போட்டியை ஒழுங்கு செய்த திரு. நடராஜன் பெயர்களை வாசித்துக் கொண்டிருப்பதையும் காணலாம்.

## 23 ஆயிரம் பிச்சைக்காரர்கள்

கொழும்பு, மே 9

யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலைமாவட்டங்களைத் தவிர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகளில் இருக்கும் பிச்சைக்காரர்களின் எண்ணிக்கை 23 ஆயிரம் என்று ஆய்வு ஒன்றின் மூலம் தெரிய வந்துள்ளது.

புனர் வாழ்வு அளிப்பதற்காக கொழும்பு பகுதியில் இருந்து 3 ஆயிரத்திற்கும் அதிகமான பிச்சைக்காரர்கள் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

கண்டி, கதிர்காமம், அனுராதபுரம் பகுதிகளில் இருந்தும் பிச்சைக்காரர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

### உணவு முத்திரை

முல்லைத்தீவு மே 9

முல்லைத்தீவு உதவி அரச அதிபர் பிரிவுக்கு உட்பட்ட சகல கிராம சேவையாளர்களும் தத்தமது பகுதிகளில் உணவு முத்திரைகளை வழங்கி வருகின்றனர், (ப - 92)

### ஷப்றா-உதயன் அனுசரணையில்
## மருதனாமடத்தில் நாளை மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி

மயிலணி, மே 9

தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுக்களில் ஒன்றும், திகில் நிறைந்ததுமானமாட்டு வண்டிச் சவாரிப் போட்டியை மீண்டும் கண்டு களிக்கும் வாய்ப்பு, குடாநாட்டு மக்களுக்கு நாளை கிடைக்கிறது.

ஷப்றா-உதயன் நிறுவனங்களின் அனுசரணையுடன், உடுவில் உதவி அரசாங்க அதிபர்பிரிவின்விளையாட்டுக் குழுவினர், நாளை வியாழக்கிழமை மருதனார்மடம் சந்திக்கு அருகாமையில் மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டியை நடத்துகிறார்கள்.

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் குடாநாட்டில் முதல்முறையாக நடக்கவிருக்கும் இந்த மாட்டு வண்டிச் சவாரிப்போட்டியில் ஏராளமான வண்டிற்காரர்கள் கலந்துகொள்ள உள்ளனர். அதே போல ஆயிரக்கணக்கானசவாரிப் போட்டி ரசிகர்களும் நாளை மருதனார்மடத்தில் கூடவுள்ளனர்.

மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும். மூன்று பிரிவுகளாக நடக்கும் சவாரிப் போட்டியில் முன்னணியில்திகழும் மொத்தம் பத்துச் சவாரி வண்டில்கள் மருதனார் மடத்திலிருந்து விழாவும்கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும் சுன்னாகம் மத்திய சந்தை அரங்கிற்குப் பவனியாகச்செல்லும்.

அங்கு திரு. க. வேலும்மயிலும் தலைமையில் நடைபெறும் விழாவில் உடுவில் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்பிப்பார்.

ஷப்றா நிறுவன இயக்குநரும், உதயன் வெளியீட்டகத்தின் நிர்வாக இயக்குநருமான திரு. ஈ. சரவணபவன் தம்பதிகள் கௌரவ விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் சுன்னாகப் பிரதேசப் பொறுப்பாளர் திரு. சிவா, வி. பு. மக்கள் முன்னணியின் வலிகாமம் அரசியல் பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர், மாட்டுவண்டிச் சவாரிவித்தகர் திரு. இ. இளையதம்பி, ஷப்றா நிறுவனத்தின் யாழ்ப்பாணக் கிளைப் பொதுமுகாமையாளர் திரு. இ. ஸ்ரீரங்கநாதன், உதயன் வெளியீட்டகத்தின் பிரதம ஆசிரியர் திரு. ம. வ, கானமயில்நாதன் ஆகியோர் விழாவில் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

மாட்டுவண்டிச் சவாரிப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்களை திருமதி யசோதை சரவணபவன் வழங்குவார்.

கலை நிகழ்ச்சிகளில் 'ராஜன்ஸ்' குழுவினரின் 'இதயகீதம்' இன்னிசைநிகழ்ச்சியும், 'அசையும் சிலைகள்' என்ற நாடகமும் சிறப்பு அம்சங்களாக இருக்கும். (அ)

## சைக்கிள்- மரதன் ஓட்ட போட்டிகளில் வென்றோர்

குருநகர், மே. 9

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க தினத்தை முன்னிட்டு நேற்று செவ்வாய் காலை யாழ்- செஞ்சிலுவைச் சங்கம் நடத்திய சைக்கிள், மரதன் ஓட்ட முடிவுகள் வருமாறு:

52 மைல் ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டம்; முதலாம் பரிசு; வை. கைலைநாதன் சங்கானை உ. அ. அ. பிரிவு, இரண்டாம்பரிசு: எஸ். சிற்பவானந்தன் தெல்லிப்பழை உ. அ. அ. பிரிவு, மூன்றாம் பரிசு: எஸ். துரைமணி யாழ். உ. அ. அ. பிரிவு.

பெண்களுக்கான 12 மைல் சைக்கிள் ஓட்டம்: முதல் பரிசு: செல்வி. ரி. சுஜிதா சண்டிலிப்பாய் உ. அ. அ. பிரிவு, இரண்டாம் பரிசு: செல்வி என். இராசமலர் சாவகச்சேரி உ. அ அ. பிரிவு, செல்வி க. ஞானகௌரி சாவகச்சேரி உ.அ அ. பிரிவு.

26 மைல் மரதன் ஓட்டம் முதலாமிடம் கி. உதயகுமார் கோப்பாய் உ. அ. அ. பிரிவு, இரண்டாமிடம் க. சண்முகம்பிள்ளை வேலணை உ.அ. அ. பிரிவு, மூன்றாமிடம் வே. ஆன்சலம் யாழ். உ.அ. அ. பிரிவு.

வலுவிழந்தவர்களுக்கான ஒரு மைல் முச்சக்கர வண்டி ஓட்டம் முதலாமிடம்: நா. சந்திரன் ஈச்சமோட்டை, இரண்டாமிடம் எ. குணசிங்கம் யாழ்ப்பாணம், மூன்றாம் இடம் ஆர். கோபால்.

விளையாட்டுத்துறை அமைச்சின்அனுசரணையுடன் நடத்தப்பட்ட மேற்படி போட்டிகளை முறையே யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. வி. பி. பாலசிங்கம், யாழ். தலைமைப்பீட உதவி அரச அதிபர் திரு. கே. சண்முகநாதன், யாழ். செஞ்சிலுவைச் சங்க தலைவர் டாக்டர் ரி. தெய்வேந்திரன், நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. கனகலிங்கம் ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர். (இ-51)

## சிறப்புற நடந்த திருவிழாக்கள்

யாழ்ப்பாணம், மே 9

யாழ். வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் [நாச்சிமார் கோவில்] தேர்த் திருவிழா நேற்று செவ்வாயன்று பக்தி பூர்வமாக நடைபெற்றது.

துலாக்காவடி, பஜனைகளுடன் தேருலா நடைபெற்றது. பிற்பகல் 2. மணிக்கு விநாயகர், சுப்பிரமணியர் சமேதராக பச்சை சாத்திக் கோவிலுக்கு எழுந்தருளும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

நண்பகல் 12- மணிக்கு மகேஸ்வர பூஜை அன்னதானம் வழங்கப்பட்டது. இன்று புதன்கிழமை தீர்த்தமும் நாளை வியாழக்கிழமை பூங்காவனத் திருவிழாவும் நடைபெறும்.

★ ★

நேற்றுபுங்குடுதீவு ஸ்ரீஇராஜ இராஜேஸ்வரிஅம்பாள் (கண்ணகைஅம்மன்)ஆலய ரதோற்சவம் பக்திபூர்வமாக சிறப்பாக நடந்தேறியது.

துலாக்காவடி, கற்பூரச்சட்டி பஜனைகளுடன் பெருந்திரளான பக்தர்கள் தேர்த்திருவிழாவில் கலந்து கொண்டனர்.

நண்பகல் 12 மணிக்கு புதிய அன்னதான மடத்திற்கான அத்திவாரக்கல் நடப்பட்டது. இதில் கோயில் தர்மகர்த்தா சபை தலைவர் திரு. ந. செல்லத்துரை, மு. நடராசா திரு. எஸ். கே. செல்லையா ஆகியோர் கலந்து கொண்டனர். அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது. (இ-51)

## திருகோணமலை - மூதூர் படகுச் சேவை பாதிப்பு

திருகோணமலை, மே 9

மோசமான காலநிலை காரணமாக திருகோணமலை- மூதூர் படகுச் சேவை கடந்த சில தினங்களாக பாதிக்கப் பட்டிருக்கிறது. இதனால் மூதூருக்கான தபால் சேவையும்ஸ்தம்பிதமடைந்துள்ளது.

நேற்று முன் தினம் திருகோணமலையிலிருந்து மூதூர் நோக்கிச் சென்ற பயணிகள் படகு கடல் கொந்தளிப்புக் காரணமாக மூதூர்க்கரையை அண்மிக்க முடியாமல் இடை வழியிலேயே திரும்பியது.

இதனையடுத்து இப்படகுச் சேவை தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டது.

கடல் கொந்தளிப்புக் காரணமாக மீனவர்களும் கடந்த சில தினங்களாக கடலுக்கு செல்லவில்லை. (உ-ரி)

## இரு மூடைகள் நிறைய போலி 500 ரூபா நோட்டுகள்!

போலி ஐந்நூறுரூபா நோட்டுக்கள் கொண்ட இரண்டு மூடைகள் கண்டுபிடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக இரகசியப் பொலீஸார் ஒரு தமிழரையும் ஒருபறங்கியரையும் கைது செய்தனர்.

இந்த நோட்டுக்கள் இந்தியாவில் அச்சடிக்கப்பட்டு கொண்டுவரப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

தீவிரவாதக் கோஷ்டி ஒன்றுக்கு ஆயுதங்களை வாங்குவதற்கே இப்பணம் பயன்படுத்தப்பட்டிருப்பதாக இரகசியப் பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.

கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டல் அருகில் வைத்து இரண்டு இளைஞர்களும் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்ட போது இந்த விவரம் வெளியானது.

முதலாளி ஒருவரும் இம்மோசடி தொடர்பாகக் கைது செய்யப்பட்டார்,

சந்தேக நபர்கள் கோட்டை நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

தலா 30 ஆயிரம் ரூபா சரீர பிணையில் சந்தேகநபர்களை விடுத்த நீதிவான் ஞாயிறு தோறும் குற்றப் புலனாய்வு அலுவலகத்தில் ஆஜராகும் படியும் உத்தரவிட்டார். (உ-எ)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சுப்பிரமணியம் வள்ளியம்மை

சுப்பிரமணியம் வள்ளியம்மை காலமாகிவிட்டார். இவர் நல்லூர் மூத்தவினாயகர் வீதியைச் சேர்ந்த செந்தூர வைத்தியர் அ. சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், தவமணி, சந்திரதாஸ் [தொழில் நுட்பக் கல்லூரி மாணவன்] ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்வரத்தினத்தின் அன்பு மாமியாரும் ஸ்ரீரங்கன், துஸ்யந்தி ஆகியோரின் அன்பு பேத்தியும, ஆவார். அவரது ஈமக்கிரியைகள் இன்று புதன் கிழமை மாலை 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**மகன் சு. சந்திரதாஸ்.**

65, மூத்தவினாயகர் வீதி,
நல்லூர்.
[13125]

### திரு. வேலுப்பிள்ளை செல்லத்துரை
[மோட்டார் கார் வியாபாரி]

உரும்பிராய் மேற்கைச் சேர்ந்த திரு. வேலுப்பிள்ளை செல்லத்துரை (மோட்டார் கார், வியாபாரி) அவர்கள் நேற்றுக் காலமாகிவிட்டார்.

அன்னார் பகவதி அம்மாவின் அன்புக் கணவரும், தவராசா, நவரத்தினராசா, சத்தியசீலன், (பிரான்ஸ்), யோகராசா (பிரான்ஸ்), செல்வநாதன் (பிரான்ஸ்), ராஜேஸ்வரி, செல்வநாயகி ஆகியோரின் அன்புத் தந்தையும், வரதராஜா (இத்தாலி), சற்குணம், மனோன்மணிதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவராஜினியின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 09 - 05 - 90 புதன்கிழமை இன்று பிற்பகல் 3. 00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக உரும்பிராய் வேம்பன் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்.

மோட்டார் கராஜ்
விளாத்தியடி
மானிப்பாய் வீதி,
உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.
(13126)

தகவல்:
**பிள்ளைகள்,**
**செ. தவராசா**
**செ. நவரத்தினராசா**

## அறிவித்தல்

சங்குவேலி தெற்கு
சனசமூக நிலைய கட்டிட நிதிக்கான அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு பின் போடப்பட்டுள்ளது. எதிர்வரும் 25 - 5 - 90 அன்று சிரணி நாகம்மாள் ஆலயத்தில் நடைபெறும் என அறியத்தருகிறோம்.

இப்படிக்கு
நிர்வாகிகள்
ஐக்கிய இளைஞர்கள்
(13123)

## அதிகரிப்பு

புங்குடுதீவில் சட்டவிரோத மின்பாவனை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.
(ப-160)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 203/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 09-05-1990இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org